www.tamilarangam.net

# KATPAHAM

# கற்பகம்



NR. 13 01. 08. 1997 இதழ் 13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**KATPAHAM**
**கற்பகம்**
**ISSN 0909-9697**

**Readaktion:**
Troels Johansen
**(Ansv.)**
**Readaktion:**
A.Paramaswaran
**Readaktionhjælp**
David George
K.Kunaratnam
S.Paramaswaran
M.S.Kandasamy
T.Selvakumar

பத்திரிகைப் பொறுப்பாளர்:
ற்றோல்ஸ் ஜோகான்சன்
பதிப்பக பொறுப்பாளர்:
ஆ. பரமேஸ்வரன
உதவியாளர்கள்:
டேவிட் ஜோர்ஜ்
க. குணரட்ணம்
சு. பரமேஸ்வரன்
சு. கந்தசாமி
து. செல்வக்குமார்

## Inhold
## உள்ளடக்கம்

I er allesammen
தமிழர்கள்
Seminar
இனரீதியான
Retelser
Min Fri tid
Spejdere
நாவற்பழங்கள்
தமிழரும் மதப்
நாடு கடந்த வாழ்வு
யார் புரட்சிப் பெண்
ஒரு பிரஜை நாடு
பத்திரிகைச் சுதந்திர
வெந்தவனம்
திருஞானசம்பந்தர்
சிறுவர் பகுதி...
இந்து சமயத்தின் ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# I er allesammen ambassadører.

I begyndelsen af august afholdt "Tamil Refugee International Network" et 3-dages seminar i Herning. Formålet med seminaret var bl.a. at koordinere informationer og forskellige former for indsats for tamilske flygtninge i Europa.

Jeg var inviteret til at sige noget om kommunikation og lobby-virksomhed. I det følgende vil jeg gengive et par af mine synspunkter herom, idet de kan være til nytte i en bredere forsamling.

Emnet er vigtigt, for det er ofte vanskeligt at komme til orde i medierne - aviser, radio, TV. Medierne focuserer nemlig ikke så ofte på positive ting, men som regel på voldsomme og dramatiske begivenheder som f.eks. blodige kampe eller terrorvirksomhed. Og der er nok af kampe og ulykker hver dag. Det er det, vi ser i TV.
Hvis udviklingen i et område derimod forløber rimeligt roligt, vil situationen i de pågældende lande eller områder ikke finde vej til medierne. Desværre.
Folks hukommelse er kort; folk glemmer meget hurtigt. Derfor er det vigtigt, at man er i stand til at fodre medierne til stadighed, dersom man har en sag, som man gerne vil have, at folk kender til. Hvis vi tænker på Sri Lanka, må vi erkende, at det er yderst sjældent, at der er oplysninger om forholdene i jeres land. Det medfører, at danskerne glemmer, hvordan situationen er, og hvorfor I er her som flygtninge.

Det er derfor af stor betydning, at der er mange "ambassadører" for en sag. Hver eneste af jer er en ambassadør. Det er ikke nok at tænke på egen situation; I er faktisk nødt til også at tænke solidarisk på situationen i Sri Lanka eller på tamilers tilværelse i Danmark og andre steder. Som ambassadør er man repræsentant for sit land; både det positive og det negative, det sande og det falske, som I gør, er med til at danne et indtryk af tamiler og Sri Lanka i andre menneskers bevidsthed.
Et af mine synspunkter på seminaret var derfor, at I til stadighed skal fodre medierne med nyttige informationer. Til gengæld skal alle informationer være 100% rigtige. Det kan være fristende at pynte på



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


informationer eller at dreje dem lidt for at vinde sympati og fremme egen sag. Men det går ikke, for hvis pressefolk såvel som den almindelige borger oplever, at det, de hører eller ser om Sr Lanka, ikke passer, vil de miste både interesse og lydhørhed. Vi oplevede det for nogen tid siden, da der kom urigtige oplysninger frem i forbindelse med tilbagesendelsen af pigen fra Nørre Nissum skole. Urigtige oplysninger skader; det må alle vide.

I vore dage er lobby-virksomhed et ganske almindeligt fænomen. Det betyder jo, at et land, en organisation, en forening, osv. ønsker at gøre opmærksom på en sag og at skabe en positiv holdning til sagen. Derfor gælder det om at tale med mange og betydningsfulde personer. Som tamiler er det vigtigt, at I taler med mange danskere i forskellige jobs og informerer om forholdene i Sri Lanka. Det kan være i EF, som man talte om på seminaret, men det er også vigtigt at være i god kontakt med politikere nærmere på, med arbejdsgivere, naboer, m.fl. I har allesammen et job at udføre; I er allesammen ambassadører. Hvis I udfører denne opgave på en god måde, kunne det måske ende med, at kendskabet til Sri Lanka ville være langt bedre i befolkningen, og at medierne derfor ville beskæftige sig mere med jeres land.

En koordineret indsats er nødvendig. Derfor var seminaret vigtigt. Gå selv igang med opgaven som ambassadør.

*Troels Johansen.*

## தமிழர்கள் யாவரும் ஒருங்கிணைந்து . . .

“ தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பானது” ஆவணி மாத ஆரம்பத்தில் ஹேர்ணிங்கில் மூன்று நாட்கள் ஒரு கருத்தரங்கை நடாத்தியது. இக்கருத்தரங்கின் நோக்கமானது, ஐரோப்பாவில் வசிக்கின்ற தமிழ் அகதிகளுக்கான, தகவல்களை ஒன்று சேர்ப்பதும், அவற்றைபரிமாற்றம் செய்து கொள்வதுமேயாகும்.

இக்கருத்தரங்கில் என்னையும் ஒரு சில கருத்துக்களைக் கூறும்படி அழைத்திருந்தார்கள். இது தொடர்பாக பரந்துபட்ட ஒன்றிணைப்பு ஏற்படலாம் என்பதற்காக எனது ஒரு சில கருத்துக்களை இங்கு தெரிவிக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இக்கருத்தரங்கில் எடுத்துக் கொண்ட விடயம் மிகமுக்கியமானது. ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் தகவல் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்றவை, அகதிகள் தொடர்பான, அதுவும் சாதகமான தகவல்களை வெளியிடுவதில்லை. ஆனால் பயங்கரமான சண்டைகளையும், விபத்துக்களையும், தீவிரவாதச் செயல்களையும் தான் போதுமான அளவில் வெளியிடுகின்றார்கள். இதனை நாம் அன்றாடம் காண்கிறோம்.

மக்களுக்கு ஞாபகசக்தி மிகக்குறைவு, அவர்கள் மிக விரைவில் எதையும் மறந்து விடுவார்கள். எனவே திரும்பத்திரும்ப ஒரு விடயத்தை பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கூடாக தெரியப்படுத்தல் வேண்டும். இலங்கையைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்கையில், அங்குள்ள நிலமைகள் பற்றிய, தகவல்கள் இங்குள்ள பொதசனத் தொடர்பு சாதனங்களில் வெளிவருவது மிகமிக் குறைவு என்பதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனால் டெனிஸ் மக்கள் இலங்கையின் நிலைமையையும், நீங்கள் ஏன் இங்கு அகதிகளாக இருக்கிறீர்கள் என்பதனையும் மறந்து விடுகிறார்கள்.

ஆகவே ஒரு விடயத்திற்காக பல " தூதர்கள் " இருப்பது, விடயத்தின் கருத்தை தெளிவுபடுத்தி பிரதிபலிக்கும். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் தூதர்களே. அதாவது நீங்கள் ஒவ்வொருவரும் தங்களது தனிப்பட்ட, சொந்த நிலமைகளைப்பற்றி மட்டும் சிந்திக்காது, இலங்கையைபற்றி அல்லது டென்மார்க்கில் வாழுகின்ற தமிழ் அகதிகளைப்பற்றியும் மற்றும் ஏனைய பகுதிகளில் வாழுகின்ற தமிழ் அகதிகளின் நிலமைபற்றியும், ஒற்றுமையுடன், ஒன்றிணைந்து சிந்திக்க வேண்டியது முக்கியமாகின்றது.

ஒரு நாட்டின் தூதர் எப்படி செயல்படுகின்றாரோ அது போல் தமிழ் மக்கள் தங்கள் இனத்திற்காக தூதராக செயல்பட வேண்டும். அதாவது மற்றவர்களுடைய மனதில் உங்கள் பிரச்சினைகளையும், உங்கள் நிலமைகளையும் மிக எளிதில் பதியவைக்கும் வண்ணம் செயல்படுங்கள்.

நடந்து முடிந்த அக்கருத்தரங்கில், நீங்கள் பொதுசனத்தொடர்பு சாதனங்களுக்கு இலங்கைபற்றியும், தமிழ் அகதிகளைப்பற்றியும் 100 வீதம் சரியான தகவல்களைக் கொடுங்கள் என்பதே எனது கருத்தாக அமைந்தது. சிலவேளை பொது மக்களிடையே அனுதாபம் ஏற்படவேண்டும் என்பதற்காக செய்திகளை கூட்டிக் குறைத்துச் சொல்லுவது நல்லதல்ல. ஏனெனில் நீங்கள் கூறியது தவறு என்று தெரியவரும்போது உங்களைப்பற்றிய நன்மதிப்பு டெனிஸ்மக்களிடையே குறைந்து விடுகின்றது. இதற்கு உதாரணமாக சில மாதங்களுக்கு முன்னதாக Norre Nissum பாடசாலை தமிழ் மாணவி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதைக் கூறலாம். தவறான தகவல்கள் எப்பொழுதுமே ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தெளிவு.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சாரம் என்பது குறிப்பிடத்தக்க-நிகழ்வாக அமைந்து வருவதை தினசரி நிகழ்வுகளில் சாதாரணமாக காணக்கூடியதாகவுள்ளது. ஒரு சங்கம், கழகம், நாடு எதுவாக இருந்தாலும் ஒரு விடயத்தைப் பற்றித் தெளிவுபடுத்தும் போது சாதகமான விளைவுகளை கொண்டுவரக்கூடியதாக அமையவேண்டும். எனவே தமிழர்களாகிய நீங்கள் எப்பொழுதும் அயலவர்களுக்கும், உங்கள் நெருங்கிய டெனிஸ் நண்பர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், சக ஊழியர்களுக்கும், தமிழ் அகதிகள் பற்றியும், இலங்கையின் இன்றைய நிலைமைபற்றியும் விளக்கமாகக் கூறவேண்டும். அத்துடன் கருத்தரங்கில் நான் கூறியது போல் ஐரோப்பிய பொதுச்சந்தையின் அதிகாரிகளுக்கம், அரசியல்வாதிகளுக்கும் தமிழர்களின் நிலைமையை எடுத்துக் கூறவேண்டும். தமிழர்கள் யாவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையோடு உங்கள் மக்களுக்காக குரல் கொடுக்கின்ற பொழுது அது பலரது மனத்திலும் தெளிவாகப் பதியவைக்கும். அத்துடன் பொதுசனத்தொடர்பு சாதனங்களும், உங்களின் நாட்டைப்பற்றியும், மக்களைப்பற்றியும், பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுத்து அதிகளவில் செய்திகளை வெளியிடும்.

எனவே நடந்து முடிந்த கருத்தரங்கானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அத்துடன் ஒரு ஒன்றிணைந்த கூட்டுமுயற்சியானது மிகவும் வரவேற்கக்கூடியது. எனவே ஒவ்வொரு தமிழரும் உங்கள் மக்களின் நலன் கருதி சரியான தூதர்களாகச் செயல்படுங்கள்.

***Troels Johansen.***

# *Kulturfestival*

Vi har i bestyrelsen besluttet at springe kulturfestivalen over 1997.
Der er flere grunde til beslutningen, for det første har der været mange tamilke arrangementer her i sommer ( ex div. templefester, bryllupper, arangættam m.v.) og der er planlagt flere her i efteråret, og for det andet har der ikke været særlig stor opbakning omkring vor sidste arrangement (pengeindsamigen den 9.8.97).
Vi glæder os til at lave kulturfestival igen i 1988, og håber på forståelse og opbakning.

På bestyrelsen vegne
Gitte Helbo.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Seminar i Randers om fremtiden for Nævnet for Etnisk Ligestilling

I efteråret 1996 blev IND-sam på linie med en række andre myndigheder og organisationer anmodet om at udtale sig om en rapport om klageadgang for etniske minoriteter. Rapporten var udarbejdet at et udvalg nedsat af Nævnet for etniske Ligestilling. Udvalget afgav en flertalsudtalese og en mindretalsudtalese. Flertallet anbefalede oprettelse af et klageorgan. Mindretallet fandt, at det kunne give problemer at lave et klageorgan for en af de svage grupper - de etniske mindretal. Mindretallet fandt, at man hellere skulle arbejde for bedre forhold for flere svage grupper. Udvalget foreslog endvidere indførelse af en mæglingsordning for sager med etniske konflikter.
Udvalgsrapporten blev behandlet i Nævnet for Etniske Ligestilling, somlige som udvalget var delt i et flertal og e mindretal. fleretallet af nævnet støttede forslaget omoprettelse af et særligt klageorgan og etablering af en mæglingsinstitution.
På et seminar, d. 29 april i Randers blev udvalgsrapporten drøftet og på trods af, at der kom mange forskellige synspunkter frem påmødet, syntes der at være en betydelig opbakning blandt seminar deltagerne for ideen om oprettelse af et klageorgan.

**Ændring af Nævnet**
Folketinget har under sit afsluttende møde inden sommerferien vedtaget en lov om ændring af loven om Nævnet for Etniske Ligestilling. Det blev på seminaret i Randers tilkendegivet, at der vil blive arbejdet videre med udvalgs rapporten om et klageorgan for etniske mindretal. Det vil efter vedtagelsen af lovændringen om Nævnet for Etniske Ligestilling være det nye nævn, der skal arbejde videre med planerne om et klageorgan. Det er derfor ikke uden betydning, hvorledes det nye nævn er sammensat i forhold til tidligere.

**Ministerens indflydelse styrket**
IND-sam blev som led i lovforslagets behandling i folketinget anmodet om en udtalelse i marts 1997, og i denne udtalelse gav IND-sam udtryk



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



for den opfattelse, at man fandt de foreslåede ændringer uhensigtsmæssige. I henhold til bemærkningerne til lovforslaget er det hensigten med ændringen at styrket nævnets sekretariat og gøre det uafhængig. Hvis det har været hensigten hermed at markere nævnet som selvstændigt organ, synes det at være modstrid mellem en sådan hensigt og så det faktum, at Indenrigsministerens indflydelse på sammensætningen af nævnets for retningsorden styrkes i forholds til den tidligere gældende lov. IND-sam har herudover gjort opmærksom på, at man som hidtil ønsker at have en indstillingsret til ministeren for et medlem af nævnet.

*Etnica nr. 61*

## இனரீதியான சமத்துவத்திற்காகப் பாடுபடும் குழுவினரின் எதிர்காலத்திட்டங்கள் பற்றி Randers நகரில் நடைபெற்ற கலந்துரையாடல்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக மேன்முறையீடு செய்யும் முறை பற்றித் தயாரித்த அறிக்கை பற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் படி பல அதிகாரபீடங்களையும், நிறுவனங்களையும் 1996ம் ஆண்டு இலையுதிர்காலப்பகுதியில் இனரீதியான சமத்துவத்திற்காகப் பாடுபடும்குழு கேட்டுக் கொண்டது. அதேவேளை சிறுபான்மை இனத்தவர்களின் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பிடமும் (IND-sam) வேண்டுகோள் விடுத்தது. மேன்முறையீடு செய்வதற்காக ஒரு பொதுக்குழுவினை நிறுவும்படி பெரும்பான்மையினர் சிபார்சு செய்தனர். சிறுபான்மை யினருக்காக ஒரு பொதுக்குழுவை நியமிப்பதால் பிரச்சினைகள் தோன்றலாம் என சிலர் கருத்துத் தெரிவித்தனர். சிறுபான்மையினரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது நடுநிலமை வகிக்கும் ஒரு முறையை செயற்படுத்த வேண்டுமென குழு ஆலோசனை கூறியது.

அந்தக் குழு தயாரித்த அறிக்கைபற்றி இனரீதியான சமத்துவத்திற்காகப் பாடுபடும் நிறுவனம் ஆராய்ச்சி செய்துவிசேடமேன்முறையீட்டுக் குழுவையும், நடுநிலமை வகிக்கும் ஒரு நிறுவனத்தையும் உருவாக்கு வது சிறந்தது என்று பெரும்பான்மையினர் கருத்துத் தெரிவித்தனர்.

சித்திரைமாதம் 29 ம் திகதி Randers ல் நடைபெற்ற கலந்துரையாடலில், இந்த அறிக்கை சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டது. வித்தியாசமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

விசேட மேன் முறையீட்டுக் குழுவினை நிறுவுவது பெரும்பயனுடையதாக அமையும் என்று பெரும்பாலானோர் தெரிவித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**குழுவின் மாற்றம்**

இனரீதியான சமத்துவத்திற்காகப் பாடுபடும் குழுவின் சட்டத்தினை மாற்றமுடியும் என்ற ஒரு சட்டத்தை அரசாங்கம் கோடைகால விடுமுறைக்கு முன்பு நடந்த பாராளுமன்ற கூட்டத்தில் நிறைவேற்றியது. அறிக்கையில் குறிப்பிட்டபடி தொடர்ந்தும், விசேட மேன் முறையீட்டுக் குழு சிறுபான்மையினரின் சமத்துவத்துக்காகச் செயற்படும் என்று Randers ல நடைபெற்ற கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டது. இனரீதியான சமத்துவத்திற்காகப் பாடுபடும் குழுவின் சட்டமாற்றங்களின் பின்பும், இவ் வமைப்பானது தொடர்ந்தும் விஷேட மேன்முறையீட்டுக் குழுவின் திட்டங்களுக்கு ஏற்ப செயல்படும். எனவே புதிய அமைப்பானது முந்தியது போல் அல்லாமல் வேறு ஒன்றையும் இணைத்த ஒரு நிறுவனமாக மாற்றமடைந்துள்ளது.

**மந்திரியின் பங்களிப்பு முக்கியமானது.**

சட்டத்தில் மாற்றம் செய்யப்பட இருப்பது தொடர்பாக IND-sam ஐயும் கருத்து தெரிவிக்கும்படி 1997 பங்குனி மாதத்தில் கேட்கப்பட்டது. இந்த சட்டமாற்றமானது இவ்வமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு சாதகமானது அல்ல என்று IND-sam கருத்துத் தெரிவித்தது. ஏனெனில் இனரீதியான சமத்துவத்திற்காகப் பாடுபடும் குழுவின் சட்டமாற்றமானது குழுவின் தமது செயற்பாடுகளை சுயேச்சையாக செயற்பா வழிவகுக்கும் என்பதே IND-samன் கருத்தாகும். இக்குழுவானது சுயேச்சையாக இயங்கினால், இதன் நோக்கத்திற்கும் செயற்பாடகளுக்குமிடையே முரண்பாடு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது.. எனவே இனரீதியான சமத்துவத்திற் காகப்பாடுபடும் குழுவானது, முந்திய சட்டதிட்டங் களுக்கமைய ஆக்கபூர்வமான விடயங்களை மேற்கொள்ள வேண்டுமென்று, மேலும் தமது செயற்பாட்களை முந்திய சட்டங்களுக்கமைய விஸ்தரித்துக் கொள்ளலாம் என்று உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார். இக்குழுவின் அங்கத்தவர்களின் தெரிவில் உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சருக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் IND-sam தனது கருத்தை தெரிவிதத்து.

# கலாச்சாரவிழா ~ 1997

இவ்வாண்டு Herning, Ikast உள்ளூராட்சிப்பகுதிகளில் பல கலாச்சாரநிகழ்ச்சிகள் வாராவாரம் நடைபெற்றுவருவதால் ஒன்றியமானது இவ்வாண்டு எமது கலாச்சாரவிழாவினை நடத்துவதில்லை என நிர்வாகசபை முடிவுசெய்துள்ளது.

1998ம் ஆண்டு சிறந்த முறையில் கலாச்சாரவிழாவை நடத்துவதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

நிர்வாகசபை சார்பாக

Gitte Helbo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# "RETELSER TIL DØD OG HVAD SÅ?"

I Katpaham nr. 12, (01.05. 1997) skriver Kala Balakrishnan en artikel om døden som hun kalder"DØDEN-OG HVAD SÅ.." Jeg vil gerne tilføje nogle rettelser om min egen mening. Jeg ved ikke om det er Virginia Burns Tighe du mener som du har læst om i det ugeblad, hvis det er hende vil jeg gerne tilføje følgende om hende.

Virginia påstod i 1950 at hun var en reinkarnation af den irske Bridey Murphy, under hypnose fortalte hun alt om sin tilværelse for godt og vel 150 år siden. Hun talte med irsk accent, hun kunne sjældne irske ord hun kunne dansetrinnene til irske jig-danse og hun kunne fortælle om personer og steder fra dengang. Alt hvad hun fortalte virkede sandt så folk troede på hende og det fik hypnose eksperter til at komme med en videnskabelig rapport. Det viste sig nemlig at nogle år før hendes hypnotiske rejser havde hun haft en nabo der hed Briedey Murphy Corrkel, det familiemedlemmer som havde boet i Irland.

Så det med at man undersøgte det og det passedesom du skriver i din artikel går ikke i det her tilfælde for det lyder nemlig som om du siger at det passer og det gør det ikke i det her tilfælde. Du skriver også at kirkens folk solgte breve hvori der står at man slipper for at komme i skærsilden til det vil jeg også gerne tilføje noget til.

De såkaldte breve du skriver om hedder "afladsbreve". Du skriver at kirkens folk solgte afladsbreve hvori der stod at man ikke skulle i skærsilden men det passer ikke for den skulle kun forkorte tiden i skærsilden. Du skriver at man har fundet ud af at det bare er fusk jeg vi gerne se beviser på at man nu har fundet ud af at det er fusk.

For ingen ved om der liv efter død så indtil vider er det ikke bevist og jeg tror heller ikke at det bliver bevist at det passer eller det ikke passer.

Til sidst vil jeg gerne sige nogle få ord om din sidst par tekster som er " Alt i alt er mennesker sat på jorden, for at gøre gode gerninger, men nogle udvikles i den forkerte retning, og bliver svindler og smuglere." Jeg vil gerne have lov til at sige vi mennesker har skabt og udviklet os selv der findes ingen gud som har skabt os vi er natturens egen produktion. Uden smuglere og svindlere tror jeg ikke at vi havde udviklet som os vi har gjort de siste millioner af år, men det betyder ikke


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



jeg synes at det er rigtigt.Jeg kunne have skrevet meget mere om de forskellige emner vi har været inde på men det vil jeg ikke til for det vil tage "tusinder" af år.
Til alle sidst vil jeg sluttte med orderene "SAMFUNDET ER OS VIS DER ER NOGET I VEJEN MED SAMFUNDET ER DER NOGET I VEJEN MED OS"
En reinkarnation er en genfødsel.

***Allan Tharmakulasingam***
Skrænten-31
6600 Vejen

*I katpaham nr 12, som udkom d.01.05.97. havde jeg skrevet noget om min fritid og interesser. (pa tamilsk) , De bad mig om at oversætte det til dansk.*

# Min Fri tid.

Hvis vi starter med et spørgsmål som f. eks. Hvad er fri tid for noget? Svaret afhænger af forskellen mellem nationer til nationer, aldersgruppe og fra det ene køn til det andet. Fri tid er en begivenhed der foregår efter af man har afsluttet sine vigtige pligter og gøremål. Det er samtidig også en begivenhed som giver hjernen og lege med ro (afslappelse) sådan at man kan holde den næste dags strabadser ud.

I gamle dage, altså før vores samfund blev omfatte af det nye teknologi ( industri), gik fritid og det almindelige arbejde hånd i hånd sammen. Børnene skulle hjælpe deres forældre, efter skoletid. Derfor fik børn, som os, ikke tid til at lege eller deltage i forskellige fritidsaktiviter, sammen med de andre. Ikke nok med at alle familiemedlemmerne skulle arbejde samlet, men deres arbejde gav dem styrke og positive (optimistiske) følelser. Præcis denne situationser man i de fleste af udviklingslandene. (ulande) Dette kalder man med et fint ord Børnearbejde. Men i industrilande (i -lande) er fritid en begivenhed der



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


er placeret ved siden af deres almindelige skoledage (Og små arbejdsdage) i stedet for sammen med dem. Børnene er heller ikke involveret i det arbejde som deres forældre har. Det vil sige at børn som os har tid til mange forskellige fritidsinteresser , efter skoletid.

**På denne måde er mine fritidsinteresser opstået**

Fodbold.
Badminton.
Litteratur viden.
Dans. (Bharathanatyam)
Frimærker.
Pengesedler.
Computer.
Hygge med familie medlemmer.

Hver tirsdag og torsdag i løbet af ugen går jeg til fodbold. Næsten hver lørdag er der fodbold kamp. Denne sport finder sted ude i det fri, herved indånder vi friluft og når vi samtidig løber opnår vi fysisk styrke og selvsikkerhed. Men hertil skal man bruge specielle støvler og strømper. Sporten fik navnet foot-ball (på engelsk) som betyder spille bold med fødderne.( fotball, fussball, fodbold).

Hver onsdag spiller jeg badminton. Man kan spille en mod en eller to mod to. Denne sport kom frem i lyset i kina for mange tusind år siden.

Min ynglings fritid er litteratur (læse bøger). Specielt kan jeg godt lide historie og selvopdigtede fantasi bøger. Jeg har læst, at ved at en person læser, finder han ud af mange ting som han ikke vidste før. Tager vi historie bøgerne , for en person en anelse viden om denne nations historie. Når jeg er alene, eller ikke har noget at tage mig til, er litteratur en fantastisk god fritidsinteresse.

En fritidsinteresse som jeg har holdt fast på er dans (Bharathanatyam) Jeg danser to- tre gange om ugen. I digtekunst, musik og drama dans, er det drama dans der viser Shiva som den evige Hersker både på himlen og på jorden.

At samle frimærker er et af mine rolige fritidsinteresse. Jeg samler både frimærker fra andre lande og Danmark. Jeg har også en samling af pengesedler fra andre lande.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Hertil kommer at jeg har en PC, som jeg bruger meget tid på.

Alle disse fritidsinteresser som jeg har nævnet ovenover er noget jeg laver uden at være sammen med nogen fra familie. Men ved at være sammen med nogen fra familien finder man helt andre løsninger. Dette kan man gøre snakke om hvorden dagen er gået, eller vedat planlægge den næste dag eller uge. Familiesamværet er vigtigt, specielt i landene.

Som jeg har nævnt før giver fritid ro til hjemmen og legemet og en selv glad. Her opstår positive tanker og følelser.

***Diinna Ram.***
30.08.1997.

# Spejdere

***Hej jeg er en pige på 12 år og kommer fra SriLanka jeg har været spejder i 4 år. (Hvornår startet spejderne i Danmark)***
***Rober Baden -Powell fra London startet drengepatrulje i 1909 og den første pigepatrulje i 1910.***
***Landslejern er hver 5. år, der kommer spejder fra mange steder i verden .***

## Landslejer 1997

I dag er det lørdag morgen, så jeg skal skynde mig at spis min mad, for i dag skal jeg og mine spejder venner på landslejer i ca en uge. Det sted vi skal værer på hedder Sundstrup.Der kommer spejder fra de fleste steder i verden, nu er kl 8.50 så skal jeg gå hen til kirken, kl 9.00 og bussen den kommer.vi setter to og to da vi kommer til lejren stod der stor bunker af vores ting, så skal vi fine vores navn på en af de stor bunker, der efter skal vi slå telt op, der efter spiser vi. Da det var aften skulle vi ned til fælles åbning. Da vi had sagt os så kom der nogen i en stor rundkreas med en fane (flag) og det vist sig at det var spejder fra de lande de kom fra gik med deres fane.

## Bygedag.

I dag skal vi bygge bænke, vaskeborder og vi skulle også grave huller til spildevandhuller kl bliver 4.00 for vi fri for så er der slaraftenland og der


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





kan man lave en masse, tiden flyver for os, da vi havde spis skulle vi gøre klar til aftengudstjeneste og der efter sover vi.

## Rejsedag

I dag skal vi rejse verden rundt. Vi går hen og henter et stykke papir og der står på hvad man skal lave og vor det land det kommer fra . Vi var delt op i grupper vi lavet både nave skilte og var til dans. Dag vi skulle hjem da kl 4.00 så var det slaraftenland og mad holdt gik i gang men den aften skule vi lave noget andet det var nemlig internationalt lejrbål .

## Naturdag

Skulle vi gå 10 km med fire poster og i morgen skal vi gå 5 km med en poste vi går og går det tog længe før vi fandt dem man dag vi ikke kunne finde post 3 spurgte vi en dame der kom kørene om hun viste det hun sage at de viste det godt så sage hun hop i så køre jeg tak sagde vi da vi kommer til det sted kunne vi ikke finde den og den 4 så tog vi der hen hvor vi skulle sove. Vi lave mad men lige pludselig var der nogen der råbte brænd for der var en pige der havde brændt sig. Mig og Liv tog hjem om natten vi vækkede en af lederne og sagde vi var kommet hjem godnat.

## Fest dag

Da de andre kom hjem var kl ca 1.00, kl 4.00 skulle vi ver ene på hovetogvet vi fik is det var ikke en lang dag men vi sluttet af med underholding der var nat-løb det var bare lige som dagløb vi kun heller ikke finne ud af det for der var nogle der var sure på hinanden.

## Badedag

Da vi var på hike havde lederne bygget en bruser, så i dag var vi i bruse bad det var på den måde at der var en der cyklet så kom der vand der var nogle der ikke havde været i bad, de skulle gå i bad i regnhver, detregnet meget vi skulle ud at grave huller rundt om telten. Det var



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ikke så sjovet, men vi skulle ikke selv lave mad i dag så det gjorde ikke så meget hvis vi ikke kunne tænde bål.

# Spordag

Vi skal være på toppen i dag, først skal vi til bowling, er efter til det levene computter spil ,et var at en fik bind for øjene så skulle vi prøve at føre den frem til målet der efter var det 100 m da Isebell havde løbet skulle Liv løbe, hun faldt og skulle gå med krykker de sidste dage, og efter aften maden skulle vi tænde bål.

# Lege dag

Vi skal på tegneserieløb i Andebymarked, og havde besøg af prinsesse Benedikte men først skal vi i Andebymarked, der kan man grav guld og få en diamant og hos bedstemorand kan man bage panekager, og hver med i en helt delt andet, men nu kunne vi gå hen og se prinsesse Benedikte jeg gik der hen hvor hun skulle komme fra og fik et billed. Det regnet også meget i dag senere kom min far og mor for jeg skulle hjem i dag. Men de andre skulle hjem i morgen, favel det var den landslejer.



# Min oplevelse

*Det var sjovet at hvær med. Jeg har set dans fra andre land, og prinsesse Benedikte har jeg også set. Og snaked med andre folk, og lært at bygge borde og andre ting. Men jeg håber at de andre også syntes det var sjovt.*

*Githa 13 år.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# நாவற்பழங்கள்

. . . . . . . . . . . . . . முல்லையூரான் . . . . . . . . . .

சென்ற இதழ் தொடர்ச்சி

ஏனவர்கள் வந்தாரென்று
காரணமோ நானறியேனப்போ.

கால்நடையாய் கடற்கரையில்
நீளச் செல்வார்.
கண்டவற்குச் சிரிப்பார்
மீசையில்லா பால்முகமோ – ஏதோ
வெருட்டுவதாய் நபனுணர்வேனப்போ.

நந்திக்கடலோரம் பதுங்கியவர்
சிறைகளின் சிறகுடைப்பார்
ஊருக்குள் யாருடனும் சச்சரவு தான் செய்யார்.
பாாத்தால் பசுப்போல
சும்மாதான் இருந்தார் அவர்கள்
பசுஸ்காக்கி உடைதன்னை
துவைக்கக் கொடுத்து
ஊருக்குள் 'சுப்பிரன்' கட்டாடி
கடைவைக்குள் வந்து நின்று
வாங்கிச் செல்வார்.
கூலியும் தப்பாது கொடுத்துப்போவர்.
நல்லவர்கள் என நம்பி
நம்மவர்கள கூடிக்குலவி
விருந்துண்டு பந்தடித்து
வெசாக்குக்கு விசிலடித்து, கூத்தடித்து
ஊருக்குள் அவர்கள்
உல்லாசமாயிருந்தார்.
ஏதும் தொழில் செய்யார்
சோம்பிக்கிடவார்
ஆனாலும் ஏதும் செய்யார்
வயல் செய்யார், மீன்பிடிக்கார்
கள்ளிறக்கார், காரோட்டார் –ஆனாலும்
ஏனவர்கள் வந்தாரென்று
காரணமோ நானறியேனப்போ,
'சும்மாதான் வந்தாரென்று'
ஊரொன்றும் அப்போது . . .
அவ்வளவாய் அலட்டவில்லை,
காலம் மீண்டும் புரண்டுபடுத்தது.
மீண்டும் காலம் புரண்டு படுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1971
'முறை'

அவர்களிப்போ அதிகமாயினர்
தங்கிடக் கொஞ்சம் தகரக் குடில்கள்
எனது
நாவல்மரங்களை சூழ எழுந்தன.
நடந்து திரிந்த
இல்லா மீசையோர் – இப்போ
பச்சை வாகன மொன்றில்
விரைந்து விரைந்து
ஊர்வலம் சென்றனர்.
சிலரது கைகளில்
நீட்டுத்துவக்கு தரித்து நின்றனர்.
முகத்தினில் கொஞ்சம்
விறைப்புத் தெரிந்தது.

அவர்கள் வாழும் இருப்பிடம் தாண்ட
ஊரும் இப்போ அஞ்சுதல் செய்தனர்.
அந்த நாவல்மரங்களுக்குள்ளே
மூலையில் ஓரமாய்
அரசஇளமரமொன்று வளரநிமிர்ந்தது,
அரசமரமொன்று வளர நிமிர்ந்தது,

முல்லையின் நிலத்தின்
மேல்நீல வானமதில்
வாளொடு சிங்கம் நிற்கும் கொடியை
ஏற்றிவைத்தவர்
பாட்டுப்பாடி சல்யூட் அடித்தனர்.

பாடியபாட்டு சிங்களத்
தேசியகீதமென்றுணர் மாந்தர்
மனதுள் ஏதோ மசமசந் தெரிந்தனர்
எனக்குள் கோபம் – கோபமாய்
பொங்கி முறிந்தது.
அப்போதெல்லாம்
சிகரட் கிடந்த கைகளுக்குள்ளே
துவக்குக் கிடந்து ஊரைப்பார்த்தது.

அவர்கள் இப்போதெல்லாம்
பந்தடிப்பதில்லை,
நந்திக் கடலோரம் பயிற்சிகள் பெற்றனர்.
ஊரும் இப்போ அஞ்சி அகன்றது,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேலிகள் பலத்தன, தடைகள் நிமிர்ந்தன
ஊரும் இப்போ அஞ்சி அகன்றது.

-தொடரும்-

## பரதி இன்று இருந்தால் .....

-:பரம்:-

படிக்கின்ற வயதில் பருவக் கோளாறால
அடித்துக் கூத்து ஆயிரம் பெடியலுடன்
முடித்துக் காரியத்தை முழுகாமல் அவளிருந்தால்
அடித்துக் கிணற்றிலிட்டு அந்திரட்டி செய்திருப்பான்.

வெள்ளை நங்கையைர் போல் வெய்யில் காலத்தில்
தள்ளியே உடைகளை தரைமீது கிடத்தல்
கொள்ளை இன்பமென குமரிகள் படையெடுத்தால்
துள்ளி யெழுந்தோடி துவக்கெடுத்து சுட்டிருப்பான்.

புதுப்புது பாடல்கள் புலன்களை முறுக்கேற்ற
மதுவுண்டு மயக்கத்தில் வாலிபன் கரம்பிடித்து
மெதுவாக அணைத்து மெய்மறந்து ஆடல் கண்டால்
எதுக்கெடி போனாயென்று எட்டி யுதைத்திருப்பான்

அன்பான கணவனும் அழகான மழலைகளும்
துன்பத்தில் துவண்டிட, துடியிடைக் காரிகையோ
வன்மமொடு அயலவன் மஞ்சத்தில் கலந்திட்டால்
கொன்று அவளுக்கு கொள்ளி வைத்திருப்பான்

# மாணவர்களுக்கு ..?

மாணவர்களே !

உங்களுக்குப் பாடசாலையில் கொடுக்கப்படும் வீட்டு வேலைகளில் அல்லது பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கப்படும் பாடங்களில் விளக்கங்கள் அல்லது இலகுவாக, புரிந்து கொள்வதற்கு, உதவிதேவைப்படுபவர்கள் எங்கள் ஒன்றிய விலாசத்திற்கு முழுவிபரங்களுடனும் எழுத்துமூலம் தொடர்பு கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழரும் மதப் போரும் (8)

*கவிவேழம் பாரதிபாலன்*

("மகாத்மா காந்தியுடன் ஒரு நாள்", "சுபாஸ் சந்திரபோசுடன் சிறுவயதிலே . . ", " பேரறிஞர் அண்ணா வாழ்த்தினார்,"! என்பது போல, உலகில் இருந்து மறைந்த பெருந்தலைவர்களைத் தங்களுடன் தொடர்பு படுத்திப் பேசியும் எழுதியும் வருபவர்களில் சுயநலமிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இல்லாதவர்கள் எழுந்துவந்து மறுப்புத் தெரிவிக்க மாட்டார்கள் என்ற கீழ்த்தரமான தைரியம் அவர்களுக்கு.

எனது வாழ்விலே சந்தித்த, பழகிய, உறவாடிய பெரியோர்கள், தலைவர்களை எனது கட்டுரைகளில் குறிப்பிட்டு எழுதும்போது எனது உண்மைச் சம்பவங்கள் போலிச் சம்பவமாக அடித்துச் செல்லப்பட்டு விடுமோ? என்று அஞ்சுகின்றேன். கற்பகத்தின் (1.12.96) மார்கழி இதழிலே முதன் முறையாக எனது குருநாதர் பற்றி எழுதத்தொடங்கியது கூட, எனக்குப் பெருமை சேர்க்க அல்ல என்பதும், விமர்சகர்களின் " இவர் பிற மதத்தவரா? என்பது போன்றகேள்விகளுக்கு விடைதர வேண்டியே குருநாதர் தொடரை ஆரம்பித்தேன்" என்பதும் மேற்படி இதழைப் படித்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

எனவேதான் கட்டுரையும் வேறொரு கோணத்தில் திசை திரும்ப நேரிட்டது.

இனிமேல் எழுதப் போகும் தொடரில் குருநாதர் தவிர, என்னை வாழ்த்தியோர், ஆசிதந்தோர் மற்றும் எனக்குப் பரிச்சியமான பெரியார்கள், தலைவர்களுடனான எனது தொடர்புபற்றி கட்டுரைத்தேவை கருதியே எழுதிச் செல்வேன் என்பதையும் வாசகர்களுக்கு பணிவுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் எழுத்துலக நண்பர் ஒருவர் என்னுடன் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த போது அறியாமை, போலிமை, புனிதத்தன்மை பற்றியும் உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது, அவருக்கு ஒரு சம்பவத்தைக் கூறினேன்.

"இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டு இருந்த காந்தியடிகளைச் சிறையில் அடைத்தனர்.

விடுதலை செய்யக்கோரி இந்திய நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் செய்தது.அதனால் வன்முறைப் போராட்டம் வெடித்தது.

இந்தச் சம்பவங்களுக்குள் சிக்காத அப்பாவியான கிராமத்தவர் ஒருவர் புகையிரதப் பாலத்தின் கீழே பாடிக் கொண்டு உல்லாசமாக மலம் கழித்துக் கொண்டிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆங்கிலப் பொலிசார் அவ்விடத்திற்கு ஓடிவந்தனர்.
தண்டவாளம் பிடுங்கி கலவரம் விளைவிப்பவர் என சந்தேகித்து அவரைச் சிறையிலே அடைத்தனர்.
அந்தச் சிறையிலே மகாத்மாகாந்தியும் இருந்தார்.
சிறைக்கு வெளியே தொண்டர்கள் காந்தியை விடுதலை செய்யும்படியாக உண்ணா நோன்பு நோற்றனர். நிலைமை கட்டுப்படுத்த முடியாது போகவே மகாத்மா விடுதலை செய்யப்பட்டார்.
கூடவே, மலம் கழித்த கிராமத்தவரும் விடுதலையானார். தொண்டர்கள் மகாத்மாவுடன் மலம் கழித்தவரையும் தமது தோழிலே தூக்கிவைத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அப்போது, தொண்டர் ஒருவரின் தோழிலே தொற்றிக் கொண்ட அந்த அப்பாவிக் கிராமத்தவர் காந்தியடிகளைப் பார்த்து "நீங்களும் பாலத்தின் கீழ் மலம் கழித்தபடியால் கைதானீர்களா? என்றாரே பார்க்கலாம்."
மேற்படி சம்பவத்தை மனக்கண்முன் நிறுத்தி நண்பரும் நானும் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டோம்.
அந்த நண்பரும், "இந்த ஒரு தகுதியே போதும் மலம் கழித்தவர் தியாகி ஆகி அவர் பரம்பரைக்கும் தொகுதிகள் நிர்ணயிக்க' என்றார்.'
அவர் நகைச் சுவையை அனுபவித்தபடியே நானும் "காந்தி மகான் போன்ற பெரியவர்களின் மௌனம் அறியாமை மிக்க அப்பாவிகளுக்கானதாக இருக்கலாம். ஆனால், அதன் விளைவோ அவர்தம் புனித வழியை மலம் கழித்தே அருவருக்க ஊக்கம் தருவதாகக் கூட ஆகலாம்" என்றேன். இதனைச் சொல்லிக் கொண்டு இருந்த போது ஏனோ தெரியவில்லை எனது கண்கள் கலங்கிவிட்டன. (காரணம் இந்த தொடருடன் தொடர்பு பட்டுக் காணப்படக்கூடும்.)

முன்னைய தமிழர் வரலாற்றில் அறிவீனங்களின் ஒட்டுமொத்தக் கணக்கெடுப்பு முழுத் தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயித்து விட்டிருக்கிறது. இலங்கை, பிரித்தானியா கொலனியாக இருந்த போது "படித்தவர்கள் வாக்குரிமை என்ற கொள்கையை முன் வைத்த சேர். பொன். இராமநாதன் ஆவர். அவர் ஆங்கிலேயரால் கௌரவிக்கப் பெற்றவர்.
தமிழர்தம் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே மேற்படி வாக்குரிமையை சிபார்சு செய்தார்.

இலங்கையில் தமிழரைவிட சிங்களவரே பெரும்பான்மையினராக இருந்தும் எழுத்து வாசனை உடைய படித்தவர்கள் வரிசையில் அன்று சிங்களவரை விட தமிழரே பெரும்பான்மையினர். இலங்கை சுதந்திரம்

www.tamilarangam.net



அடையும் போது தமிழர் நசுக்கப்படக்கூடாது, தமிழர் என்றும் தன்மானத்துடன் வாழ வேண்டும் என்ற தீர்க்க தரிசனத்துடனேயே மேற்படி தீர்மானத்தை முன்வைத்தார். ஆனால், அன்று, உடன் பிறந்தே கொல்லும் வியாதிகளாய் எம்முள்ளே இருந்தவர்கள், தமக்கு வலுச்சேர்க்க படிக்காத தமிழரின் பிரதிநிதியாகி சேர். பொன் இராமநாதன் அவர்களது தீர்மானத்தை உடைத்தனர்.

அதனால் தமிழர் பின்தங்கி சிங்களவர் முதன்மை பெற வேண்டியதாயிற்று. இவை இன்று நேற்றல்ல. காலங்காலமாக. கி.பி. 12ம் நூற்றாண்டில் சோழமன்னர்கள் புகழ்க் கொடி நாட்டிட ஆரியர் சார்ந்த வைதிகக் கொள்கைகள் துணைநின்றன. காலங்காலமாக தமிழர்தம் அறிவு ஆற்றல்கள் ஆரியர்தம் மூடமை தழுவிய பிற்போக்கான கொள்கைகளால் மழுங்கடிக்கப்படுவதை அன்றைய தமிழ் மாமேதைகளும், விஞ்ஞானிகளுமான தமிழ் சித்தர்கள் எதிர்த்தனர்.

" செப்பரிய மூன்று உலகம்
செம்பொன் ஆக்குவோம்
செங்கதிரை தண்கதிராய்
செய்து விடுவோம்
இப்பெரிய உலகத்தை
இல்லாமல் செய்வோம்
எங்கள் வல்லபம் கண்டு ஆடாய் பாம்பே —பாம்பாட்டிச் சித்தர்

அந்தரந் தன்னில்
அசைந்தாடு முத்தர்க்கு
தந்திரம் ஏதுக்கடி? – குதம்பாய்
தந்திரம் ஏதுக்கடி? —குதம்பைச் சித்தர்

அஞ்செழுத்திலே பிறந்து
அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற
பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தில் ஓர் எழுத்தை
அறிந்து கூற வல்லிரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன்
அம்பலத்தில் ஆடுமே —சிவாக்கியார்

விஞ்ஞானம், மருத்தவம், மெய்ஞானம் என சித்தர்களின் அறிவுலகம் பரந்தது. தமிழ்ச் சித்தர்களின் அன்றையகண்டுபிடிப்புகளை இன்றைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்குலகமும் வியக்கிறது. (They have acquired superhuman power being able to perform miracles)

ஆரியர் வழிவந்த தமிழர் குலோத்துங்க சோழனைத் தூண்டினர். விஞ்ஞானிகளும், மெய்ஞானர்களுமாக 400 சித்தர்கள் சோழமன்னனால் படுகொலை செய்யப்பட்டதை தமிழர்வரலாறு கறைபட எடுத்துக் கூறுகிறது. (குகையிடிக்கலகம்) தமிழர்தம் அறியாமையால் அறிவுலகம் அழியுண்டது.

கி.பி 13ம் நூற்றாண்டில் ஆரியர்தம் வைதிகக் கொள்கைகள் வீழ்ச்சியடைய, பாண்டிய சகோதரர் இருவரிடையே எழுந்த பிணக்கை சாதகமாகக் கொண்டு வட இந்தியாவில் இருந்து வந்த இஸ்லாமியனான மாலிக்கபூர் தென் தமிழ் நாட்டிற்கு படையெடுத்தான்.

திருச்சிக்கு அருகாமையில் ஆரியர்தம் வைதிகக் கொள்கையில் உருவான ஊர்மக்கள் தமது மனைவி, பிள்ளைகள் வளர்ப்புப் பிராணிகள் சகிதம் திறந்த வெளியில் கூடினர்.

தம்மைச் சுற்றிவர விறகுகளை அடுக்கினர். தீமூட்டினர். அனைவரும் தீக்குள்ளே கருகி மாண்டனர்.

இந்த தகவல் மதம்பரப்ப சென்ற கிறிஸ்தவபாதிரிகளால் வத்திக்கானுக்கு (போப்பாண்டவர் மாளிகைக்கு) வந்த தகவலாகும். மேற்படி இஸ்லாமிய படையெடுப்பால் பலர் அகதிகளாக ஈழம் புக நேரிட்டது.

அடுத்த நூற்றாண்டுகளிலும் பஞ்சம் பட்டினியாலும் அகதிகளாக ஈழம் புகுந்தனர். தமிழ் இந்துக்களை ஆரியச் சக்கர வர்த்திகளான யாழ்ப்பாண மன்னர்கள் ஆதரித்தனர். இவ்வாறு அகதிகளாக வந்தவரில் மிகவும் பிற்காலத்து வன்னியர் தமக்கு ஓர் அரசை நிறுவியதும்; யாழ்ப்பாண அரசனை போர்த்துக்கேயருக்குக் காட்டிக் கொடுத்ததும் ஈழத்தமிழர் வரலாறாகும்.

(போர்த்துக்கேசிய மொழியில் திக்கித்திக்கிப் பேசுவோர் ' காகோ' என அழைக்கப்படுவர். ("காகோ வன்னியன், காக்கை வன்னியன் என மருவி தமிழில் இடம் பெற்றது. மேற்படி புலம் பெயர்ந்த வன்னியனின் பிரதேசத் தமிழ் ஏனைய தமிழ் மக்களின் தமிழில் இருந்து வேறுபட்டமையே போர்த்துக் கேயர் 'கொன்னையன்' என கேலியுடன் அழைக்கக் காரணமாக இருந்திருக்கக் கூடும்.)

இலங்கையை ஆங்கிலேயர் விட்டுச் சென்ற 1948க்குப் பின்னர் ஏறக்குறைய 20 ஆண்டுகளின் பின்னர், பௌத்த சிங்களவர் ஆட்சியில் இனவெறியும், மதவெறியும் மேலோங்கி நின்ற ஓர் இக்கட்டான நேரத்தில் சைவமும் தமிழும் தனக்குரிய பங்கை நிலை நிறுத்தப் போராடிக் கொண்டிருந்தது. அப்போது மதத்தால் கிறிஸ்தவரான மிகச்சிறந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழறிஞர் ஒருவர் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார்.
மேற்படி அறிஞர் தமிழ்த்தாய்மீது அளவு கடந்த பக்தி கொண்டு பணிபுரிந்தார். சொந்த நாட்டில் அவர்தம் உயர்விற்கு மதம் ஒரு தடைக்கல்லாக இருந்திருக்கலாமா? என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமே. தமிழ்ப்பீடம் மேற்படி அறிஞர்தம் திறமையை அளவிடத் தவறியமை தமிழுலகம் வேதனைப்படவேண்டிய விடயமே!
மலேசியா பல்கலைக்கழகம் மேற்படி அறிஞரை தமிழ் பேராசிரியராக்க அழைத்தது. தமிழன்னை மதமும் பிறவும் கடந்தவர் அல்லவா ?
தனது மைந்தனுக்கு ஆசி தந்துவிட்டார். யோகர் சுவாமிகள் வாக்குப்போல " எல்லாம் எப்போ முடிந்த காரியம்.". ஆம் வணபிதா. தனிநாயகம் அடிகளார் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்; மலேசியா பல்கலைக்கழகத்தில் பணியாற்ற வேண்டும், அவரால் தமிழர்தம் தொன்மைச் சிறப்புகளை உலகம் கண்டு வியக்க வேண்டும். அந்த மாநாட்டைத் தமிழீழ மண்ணிற்கு அவரே எடுத்துவரல் வேண்டும்; அப்போது, சிங்கள வெறியர்கள் மகாநாட்டைக் குழப்பி கலகம் விளைவிக்க வேண்டும், உலக அறிஞர்கள்முன்நடை பெறும் குழப்பம் உலகை தமிழர் கொடுமையாக உலுக்க வேண்டும். ஏற்கெனவே, தரப்படுத்தலால் புரட்சி என எழுந்த தமிழ் இளைஞர் களுக்கு தமிழீழ சிந்தனையை விதைக்க வேண்டும் என அனைத்துச் சம்பவக் கோர்வைகளும் வண பிதா தனிநாயகம் அடிகளார் மலேசியா புகு முன்பே தமிழன்னை தயாரித்து விட்டாள்.

பிறந்த நாட்டின் பேதமைச் சூழலுக்கு வருத்தப்பட்டு மதம், பிரதேசம் கடந்து செம்மையுறச் சிந்தித்தபடியே கற்பகத்தின் மார்கழி 96 –இதழ்வழி தொடர்வோம்.
1974 க்களில் 4–வது அனைத்துலக தமிழராய்ச்சி மாநாடு நடைபெறும் ஒழுங்குகள்.
வண. பிதா. தாவீது அடிகளாரிடம் இருந்து எனது குருவானவருக்கு தகவல் வந்தது.
வண. பிதா தனிநாயகம் அடிகளார் குருவானவரின் மொழியியல் ஆய்வையும் வெளிக் கொணர விரும்புகிறார். எனவே, மாநாட்டில் குருவானவரும் கலந்து கொள்ள வேண்டும்.
ஆய்வுக் கட்டுரையின் பிரதியை தனிநாயகம் அடிகளிடம் சேர்த்து விடவேண்டும்.

www.tamilarangam.net



தகவல் கிடைத்த மறுநாள் நானே எனது குருவானவரின் ஆய்வுக் கட்டுரையுடன் தனிநாயகம் அடிகளாரைத் தேடிச் சென்றேன்.
அடிகளார் கட்டிடக் கலைஞர் துரைராஜா அவர்களின் இல்லத்தில் இருப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது.
அமைதியாக ' கவிஞர்' என்றார் மலர்ச்சியுடன். ஆய்வினை கையளித்து சம்பவத்தை விளக்கினேன்.
தனது நண்பரான எனது குருநாதரின் ஆய்வுக்கட்டுரையை பொறுமையுடன் வாசித்து முகமலர்ச்சி பெற்றார்.

(தொடரும்)

❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀

# நாடு கடந்த வாழ்வு: இருளும் ஒளியும்

***பகத் எல்லாடி மற்றும் அடெல்ரிபாத்***

நாடு கடந்து வாழ்வது நெடுங்காலமாக ஒரு விதிவிலக்காக இருந்து வந்தது. இன்று அது பொது நியதியாகிவிட்டது. பண்டைக் காலத்தில் ஒரு சமுதாயம் தனது உறுப்பினர்களின் வாழ்வை முறைப் படுத்தி வந்தது. அப்போது ஒரு சமுதாயத்திலிருந்துநாடு கடத்தப் படுவது, மரணதண்டனை பெறுவது போல் கருதப்பட்டது. நாடு கடந்து வாழ்வோர் எதிர்காலத்தைத் தன்னந் தனியாக எதிர் கொள்ள வேண்டியிருந்தது. குழுவினரின் பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்க வில்லை. அவர்கள் தங்கள் முன்னோர்களுடனும், தங்கள் கடவுளரு டனான தொடர்புகள் அனைத்தையும் இழந்தார்கள். வீடும் குடும்பமும் அமைத்துக் கொள்ள அவர்களால் இயலவில்லை. ஒரு சமுதாயத் திலிருந்து விலக்கப்பட்ட ஒரு தனி மனிதன் மீட்பற்ற ஆன்மாவாகவே கருதப்பட்டான்.

சமுதாயங்களைப் பொறுத்த வரையில், நாடு கடந்த வாழ்வு ஒரு கூட்டு உற்பாதம். ஏற்றத்தாழ்வான ஒரு போராட்டத்தில் தோல்வி கண்ட பின்னர், உயிர் பிழைத்தவர்கள், அடிமைத் தனத்தில் தள்ளப்பட்டார்கள். வெற்றி கண்டவர்கள் தோல்வி கண்ட மக்களை அவர்களின் கடந்த காலத்துடன் பிணைக்கும் தொடர்புகளைத் துண்டித்தார்கள். மனிதர்க ளுக்குரிய நற்பண்பு எதுவுமில்லாமல் கடுமையாகச் சுரண்டப்படும் பொதி மாடுகளைப் போல அவர்களை நடத்தினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடு கடந்த வாழ்வில் சகித்துக் கொள்ளத்தக்க வடிவங்களும் உள்ளன. இளவரசர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஓவியர்கள் போன்ற தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள் பெரும்பாலும் அரசியல் காரணங்க ளுக்காகத் தாயகத்தை விட்டு வெளியேற நேர்ந்தால், சிலசமயம் வசதியாக வாழ்கிறார்கள். வளமான நாடுகளில் சலுகைகளும் பதவிகளும்கூட பெறுகிறார்கள்.

எனினும் அவர்கள் அயலவர்கள் என்ற நிலமையிலிருந்து ஒரு போதும் மாறுவதில்லை. அவர்களின் இன்றியமையாத ஒரு பகுதி ஒரு தாயகத்தில் நங்கூரமிட்டு நிற்கிறது. காலப்போக்கில் தாயக நினைவும் கவலையும் சேர்ந்து அதனைப் புராணக் கதையாக்கி விடுகின்றன.

15–16 ஆம் நூற்றாண்டுகளில் நடந்த குடியேற்ற ஆதிக்க வெற்றிகளுக்குப் பின்னர் நாடு கடந்த வாழ்வு பற்றிய கோட்பாடு மாறிவிட்டது. நாடு கண்டுபிடிக்கும் பெரும் பயணங்களும் மீகாயக் கருவிகளிலும் உத்திகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களும் மாகடல் களைக் கடந்த பரிமாற்றத்திற்கான நிரந்தர இணைவனங்களும் ஓர் உலகளாவிய அங்காடிக்கு வழி வகுத்தன. நாளடைவில் இதமான அரசியல் சூழல் அல்லது பொருளாதார வாய்ப்புகள் நிலவும் மண்டலங்களை நாடி ஏராளமான மக்கள் குடிபெயர்ந்தார்கள். இவர்க ளுக்கு இடம் பெயர்வது ஒரு தண்டனையோ உற்பாதமோ அன்று. மாறுதலில் ஆர்வம் கொண்ட ஒரு வீரச் செயலாகும். அவர்கள் அதில் ஏற்படும் இடர்பாடுகளை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். மாறிவரும் உலகில் தாங்கள் பிறந்த நாட்டை ஒரு தொலைதூர நிலையான பொன்னுலகமாக – வாழ்க்கையின் நிலைமாற்றங்களுக்கிடையிலும் பாதுகாப்பான புகலிடமாக அவர்கள் கருதினார்கள்.

எனினும் இந்நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் உலகெங்கும் நாடு கடந்து வாழ்வோர் மிகச்சிறிய சிறுபான்மையினராகவே இருந்தனர். மக்கள் நிலையாக வாழ்வது ஒரு பொது விதியாக இருந்தது. மக்கள் இடம் பெயர்தல் விதிவிலக்காக விளங்கியது. இன்று நிலைமை மாறி விட்டது. முன்பு எல்லைகளை மதித்துத் தேசிய அங்காடிகளை உள்ளடக்கியிருந்த பன்னாட்டு அங்காடி இன்று அந்த எல்லைகளை ஒழித்து வருகிறது. பெருமளவுப் பொருளாதார நிதியியல், தொழில் நுட்பத் தகவல்கள் நாடுகளின் எல்லைகளைக் கடந்து உலகெங்கும் செல்கின்றன.

அனைத்து நாடுகளுக்குள்ளேயும் ஓர் எல்லைக் கோடு செல்கிறது. இது உலகளாவிய தாக்கத்தில் பங்கு பெறுவோரை அதற்கேற்ப தங்களை மாற்றிக் கொள்ள முடியாதவர்களிடமிருந்து பிரிக்கிறது.

www.tamilarangam.net



தங்களின் குறுகிய தேசிய அல்லது குழும உலகங்களுக்குள் புகுந்து கொண்டு கற்பனையான தப்பும் வழிகளை அது காண முயலுகிறது. பொருளாதாரத்தை உலகளாவியதாக்கும் பெரு வெள்ளத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் அனைவருமே சிறப்பு நலம் பெற்றவர்கள் என்று கூற முடியாது. உண்மை நிலை முற்றிலும் வேறானது. பொருளாதார ஆதிக்கத்தை தம் கையில் வைத்திருக்கும் ஒரு சிறுபான்மையினரும் வெற்றி வாயிலைத் திறந்து விடும் பண்பாட்டு நெறிகளும் அளவிட முடியாத அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் கருத்து வெளியீட்டு உரிமையையும் அனுபவித்து வருகின்றனர். இதற்கிடையில் கோடிக கணக்கான ஆண்களும் பெண்களும் தாங்கள் பிறந்த கிராமப் பகுதிகளிலிருந்தும் மண்டலங்களிலிருந்தும் நாடுகளிலிருந்தும் படிப்படி யாக துரத்தப்பட்டு வருகிறார்கள். பொருளாதார நலிவு, அரசியல் பயங்கரம், போர் ஆகியவற்றின் காரணமாக இவர்கள் தங்கள் விருப்பமின்றி அண்டையிலுள்ள அல்லது தொலைவிலுள்ள வளமான மையங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். இவர்களுக்குச் சொந்த நாட்டில் எதிர்காலம் இல்லை. நாடுகளிலும் இவர்கள் வளம் பெறுவதற்கு வாய்ப்பில்லை. இது ஓர் அவலநிலை. உலகளாவியமாதலினால் வெற்றி கண்டவர்கள் எங்கு சென்றாலும் கவலையின்றி வாழ்கிறார்கள். ஆனால் தோல்வி கண்டவர்கள் சொந்த நாட்டிலேயே விலக்கி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் குடிபெயர்ந்த நாடுகளில் ஒன்றிணைய முடியாமல் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். ஒரு சிலர் மட்டுமே நாடு கடந்த வாழ்வை சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அந்த வாழ்வு அவர்களுக்கு ஆக்கமளிக்கிறது. மற்றும் பெரும்பாலரனோருக்கு அந்த வாழ்வு வேறு விதியற்ற வாழ்வு அவர்களின் சூழலுக்கு உதவாத வாழ்வு.

இந்த இடைவெளி விரிவடைவதை உலகம் தொலைக்காட்சியில் கண்கொண்டு பார்க்கிறது. அது நிலைமையை மேலும் மோசமாக்குகிறது. அது எந்த நேரத்திலும் வெடித்து விடும் குண்டு போன்று உள்ளது. இதனால் உண்டாகும் விரக்தியும் பதற்றங்களும் நடைமுறைக்கு ஒவ்வாத போக்குகளையும் சீர்படுத்துவதற்கு எதுவும் செய்யவில்லை என்றால் மேலும் மோசமாகக் கூடும். எனினும் இப்போதைக்கு உலகிலுள்ள வசதி படைத்தவர்கள் தங்களுடைய வள வசதிகளை பகிர்ந்து கொள்வதைவிடச் சொந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே அக்கறை காட்டுகிறார்கள். அவர்கள் தங்கள் பகுதிக்குக் கற்பனைத் தடுக்குகள் மூலம் வேலி போட்டுக் கொள்கிறார்கள். அவ்வாறு செய்யும்போது அடிப்படை வாதம் என்னும்

www.tamilarangam.net



மிகவும் பிற்போக்கு வாதங்களுடன் தங்கள் கதவினைத் தட்டுகிற அயலவர்களுக்குச் செவிசாய்க்கிறார்கள்.

இந்த அயலவர்களை உற்பத்தி செய்யும் உலகளாவிய செயல்முறை யிலிருந்து தங்கள் சொந்த ஆற்றல் பிரிக்க முடியாது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். அனைத்துக்கும் மேலாக சுதந்திரம், சமத்துவம், சட்டம், நீதி, ஒருமைப்பாடு போன்ற புரட்சிக் கோட்பாடுகள் இந்த உலகை ஓர் அங்காடிச் சக்தியாக ஒருங்கிணைப்பதில் ஆற்றல் வாய்ந்த ஒரு பங்குப்பணியை ஆற்றியுள்ளது என்பதையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள் இந்த கோட்பாடுகள்தாம் மனிதனின் படைப்பாற்றலை நிலைபெறச் செய்கின்றன. அறிவியலையும் உற்பத்தித் திறனையும் முன்னேற்றுகின்றன. அறிவுச் சான்றோரின் பாதுகாப்பையும் பொருளியல் பரிமாற்றத்தையும் ஊக்குவிக்கின்றன. நாடுகளின் ஒரு சிறு குழுமத்தின் தனியுடமையாகவும் இவை நெடுங்காலமாக விளங்கி வந்துள்ளன. இனியும் இவை இவ்வாறு இருந்துவர இயலாது. இன்றைய திறந்த நிலை உலகில் அவற்றின் நலன்கள் அனைவரையும் சென்றடைய வில்லையானால் அவை யாருக்குமே கிடைக்காமல் போய்விடும்.

( நன்றி யுனெஸ்கோ கூரியர் டிசம்பர் 1996)

## யார் புரட்சிப்பெண் ?

*சோபனா சுப்பிரமணியம்*

இக்கட்டுரையின் தலையங்கத்திலேயே கேள்விக்குறி எழுப்பப்பட்டி ருக்கிறது. 'யார் புரட்சிப்பெண்'?

இக்கேள்வியை பலவிதமாக புரிந்து கொள்ளலாம். உண்மையிலேயே புரட்சிப்பெண் என்பவள் யார்?, அவள் எந்த சூழ்நிலையில் புரட்சிப் பெண்ணாக உருவாக்கப்படுகிறாள்? புரட்சிப்பெண் எப்படியிருக்க வேண்டும்?,புரட்சி என்றால்தான் என்ன?

இதுபோன்ற கேள்விகள் நீண்ட காலமாகவே என் மனதில் இருந்து வருகிறது. இக்கேள்விக்குறிகளின் காரணமாக என் மனதில் தோன்றிய சில கருத்துக்களை இங்கே கட்டுரை வடிவமாக தருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

'யார் புரட்சிப் பெண்'? எவரையும் சிந்திக்க வைக்கும் கேள்விதான். ஒரு பெண் புரட்சிப் பெண்ணாக மாறுவதற்கு பல காரணங்களை பலர் தந்தாலும் அதற்கு ஒரே ஒரு காரணத்தை மட்டுமே என்னால் கூறமுடிகிறது. அதுவே பெண்ணடிமைத்தனம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நமது தமிழ் சமுதாயத்தில் இன்றும் அழியாமல் இருப்பவைகளில் பெண்ணடி மைத்தனமும் ஒன்று. பதினேழு வயதில் மணம் முடித்து. பதினெட்டு வயதில் ஒரு பிள்ளைக்கு தாயாகும் பெண்கள் புரட்சிப் பெண்களா? புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் நாம் நமது கலை, கலாச்சாரங்களை நினைவுகூறும் முகமாக நடாத்தி வரும் விழாக்களில் சீர்கெட்ட சினிமாப்பாடல்களுக்கும், மேற்கத்திய பாடல்களுக்கும் சினிமா நடிகை போல் தோன்றி மேடைகளில் நடனமாடுபவள் புரட்சிப்பெண்ணா? நாகரீகம் என்னும் வார்த்தையைக் கூறிக்கொண்டு பெரியோரை மதிக்காதிருப்பதும், நமது தமிழ் கலாச்சாரத்தில் கட்டுப்பாடுகள் அதிகம் என்பதால், மேலை நாட்டு கலாச்சாரத்தில் நாட்டம் கொள்ளும் பெண்கள் புரட்சிப் பெண்களா? பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து குரல் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு ஒருநாள் மேடை ஏறி தொண்டை வலிக்ககத்தி விட்டு அன்றோடு என் கடமை முடிந்து விட்டது என்று நினைப்பவள் புரட்சிப்பெண்ணா? பெண்ணாக பிறந்தால் நிச்சயம் ஒருநாள் ஒரு ஆடவனைக்கைபிடித்து குழந்தை குடும்பம் என்று வாழ்வது தானே பெண்கள் வாழ்க்கை என்று நினைப்பவள் புரட்சிப்பெண்ணா? இல்லை.........

இவர்கள் யாருமே புரட்சிப்பெண்கள் இல்லை!! அப்படியென்றால் உண்மையான புரட்சிப்பெண்தான் யார்?

என்னைப் பொறுத்தவரையில் இந்த பூமியில் வாழும் அத்தனை பெண்களிடமும் புரட்சி இருக்கிறது, ஆனால் இவர்களின் புரட்சி இன்றும் இருட்டில் தூங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு நான் மேலே குறிப்பிட்ட சில குணாதிசயங்களே காரணம். பெண்ணடிமைத்தனம் அன்று வளர்ந்ததற்கும் இன்று வளர்ந்து கொண்டிருப்பதற்கும் முதற்காரணமே பெண்கள்தான்! பெண்களின் தாழ்வு மனப்பான்மை, ஒரு பெண்ணைப் பார்த்து அடுத்த பெண் பொறாமைப் படுதல் என்பவையும் ஒரு காரணமே. நமது தாய்நாட்டில் மட்டுமல்லாது இந்தியாவிலும் இன்றும் செக்கடிமைகளாக மூலையில் முடங்கி கிடக்கும் பெண்கள் இருந்துதான் வருகிறார்கள். வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களைக் கூட எண்ணி விடலாம், ஆனால் அடிமை என்னும் கைவிலங்குடனும், தியாகம் என்னும் போர்வையை இன்னும் இழுத்து போர்த்திக்கொள்ளும் பெண்களை எண்ணிவிட முடியாது. இதற்கு காரணம் ஆண்களா? தமிழ் சமுதாயமா? அல்லது பெண்களா?

செக்கடிமை என்னும் வார்த்தையை நான் பாடசாலையில் படிக்கும் போதுதான் கற்றுக்கொண்டேன். ஆனால் இதே வார்த்தையை வாழ்க்கையாக வாழ்ந்து வரும் பெண்கள், யாராவது ஒருவர் இவற்றை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்த்து குரல் எழுப்பி இருக்கிறார்களா? இல்லை காரணம் இவர்கள் தங்களின் நிலையை இன்னும் உணராமல் இருக்கிறார்கள். மாறாக தங்களின் நிலையை உணர்ந்த பெண்கள், பெண்கள் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி உண்டாக்க வேண்டும். ஆண்கள் பெண்களை மதிக்க வேண்டும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில்சமத்துவம் வளர வேண்டும் என்று எத்தனையோ (விழிப்புணர்ச்சி உண்டான) பெண்கள் மேடைப் பேச்சுக்களிலும், பட்டிமன்றங்களிலும் சொல்லிக்கொண்டுதான் வருகிறார்கள். ஒரு நல்ல காரியத்தை செய்கிறேன் அதன் மூலமாக பெண்கள் வாழ்க்கையில் விடிவு வராதா என்ற ஏக்கங்களுடன் மேடைகளில் பேசும் பேச்சாளர்களை நினைத்து பெருமைப்படுகிறேன். எனினும் இப்படி எத்தனை பெண்கள எதிர்க்குரல் எழுப்பினாலும் பெண்ணடிமைத்தனம் அழியவே அழியாது.
காரணம் தலையிருக்க வால் ஆடி எந்த பிரயோசனமும் இல்லை.
இங்கே நான் வால் என்று கூறுவது மேடை ஏறி பிரச்சாரம் செய்யும் பெண்களை. தலை என்று கூறுவது எந்தக் கட்டுக்களையும் உடைத்து எறிந்து விட்டு வெளியில் வராது இருக்கும் பெண்களை.

புரட்சி என்பது எப்பொழுது சாத்தியமாகும் என்றால், அதற்கு உண்டான வெற்றியை அடையும்போது.
அப்படியே அது புரட்சியாக இருந்தாலும் எத்தனை பெண்களுக்கு அந்த புரட்சியினால் விமோசனம் கிடைத்திருக்கிறது. இன்றுவரை நான் கேள்விப்படவில்லை. உண்மையான, திறமையான மேடைப் பேச்சாளர்களை மதிக்கிறேன்.
ஆனால் இவர்களின் பேச்சைக் கேட்பதற்கு பார்வையாளர்கள் இருந்தாலும், அவற்றை சிந்திப்பதற்கு யாரும் இல்லை. அது ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி பொழுது போக்குக்காக இதுபோன்ற பேச்சுக்களை கேட்பவர்களே அதிகம். ஆகவேதான் சொல்கிறேன் புரட்சி என்பது ஒருநாளோடு முடிந்து போவதில்லை. புரட்சியின் ஆரம்பமே அதன் வெற்றியில் தான் ஆரம்பமாகிறது. ஒருவரின் புரட்சி இன்னொருவருக்கு வழிகாட்டு மேயானால் அது புரட்சி. காலம் காலமாக சிறையில் இடப்பட்டவள் வெளியில் பறந்து வந்தாளேயானால் அவள் புரட்சிப்பெண்! புரட்சிப்பெண் என்பவள் எப்படியும் இருக்கலாம் என்பது என்ன நியாயம்? அல்லது சராசரி பெண்களைப் போல் இருக்கக் கூடாது என்பது என்ன சட்டமா? புரட்சி செய்வது என்பது அநியாயத்தை எதிர்த்து போராடுதல். அதை விடுத்து பெண்கள் தமது கோலங்களை மாற்றுதல் அல்ல புரட்சி. ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் பெண் என்பவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிறது தமிழ் கலாச்சாரம். ஆனால் எத்தனையோ தமிழ் பெண்கள் புரட்சி என்ற சொல்லையும், சுதந்திரம் என்ற சொல்லையும் சுட்டிக்காட்டி பெண் எப்படி வேண்டுமென்றாலும் வாழலாம் என்று நினைக்கிறார்கள். என்னைப்பொறுத்த வரையில் இது தவறான அபிப்பிராயம் என்றே கருதுகிறேன். நமது தமிழ் கலாச்சாரத்தில் அதிக கட்டுப்பாடுகள் பெண்களுக்கு இருப்பது வாஸ்தவம் தான். இக்கட்டுப்பாடுகளை முழு மனதோடு ஏற்று வாழ்வதே ஒரு தமிழ் பெண்ணுக்கு அழகு என்று நான் கூறவரவில்லை. எமது கலாச்சாரம் கூறும் சில நல்ல விடயங்களை ஏற்று வாழ்வது எந்த விதத்தில் தவறாகும். இன்று எத்தனையோ பெண்கள் நமது கலாச்சாரத்தை வெறுக்கின்றது மட்டுமல்லாது ஐரோப்பிய கலாச்சாரத்தை மதித்து அக்கலாச்சாரத்திற்கு தங்களை விற்கிறார்கள். அது உடையில் ஆரம்பித்து வேறு எங்கேயோ போய் முடிகிறது. நமது கலாச்சாரத்தில் இருக்கும் கட்டுப்பாடுகளை எதிர்த்து போராடாமலும், மேலும் நல்ல ஒழுக்கங்களை வளர்க்காமலும் வேறு ஒரு கலாச்சாரத்தை தேடி ஓடும் பெண்கள் புரட்சிப் பெண்களா?

முதல் நான் கூறியது போல் பெண்ணடிமைத்தனம் அழிய வேண்டுமென்றால், உண்மையான புரட்சிப்பெண் உருவாக வேண்டும் என்றால் மூலையில் முடங்கிக்கிடக்கும் ஒவ்வொரு பெண்ணும் வெளியில் வர வேண்டும்.

இப்படிப்பட்ட பெண்கள் வெளியில் வந்தால் இன்னும் ஆயிரம் இந்திராகாந்திகள் உருவாகலாம், ஆயிரமாயிரம் அன்னை தெரேசாக்கள் உருவாகலாம், எத்தனையோ பெண் பிரதம மந்திரிகள் உருவாகலாம். இதற்கெல்லாம் பட்டப் படிப்புத்தான் தேவையென்று இல்லை, பகுத்தறிவு ஒன்றே போதும்.

சீதனம் கொடுத்தால்த்தான் ஒரு ஆணால் காதலிப்கபபடுவேன் என்று வாழும் பெண்கள் மாற வேண்டும். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, புரட்சிப் பெண்ணாக மாற வேண்டும். இங்கே வெளிநாடுகளில் பாருங்கள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் ஓரளவுக்கு சம உரிமை பேணப்படுகிறது. அதற்கு காரணம் அத்தனை பெண்களும் ஒன்று சேர்ந்து போராடியதே!

**தமிழ் பெண்கள் சமுதாயத்திலும் விழிப்புணர்ச்சி வரவேண்டும் என்றால் ஒற்றுமை மிக முக்கியம். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு** என்பது எவ்வளவு ஆழமான கருத்து பார்த்தீர்களா?.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு பிரஜை நாடு

1987.மே.22,

வடமாராட்சி ஊர் அமைதியாக இருந்தது. விலங்குகளும் சத்தம் போடவில்லை பாதை விளிம்புகளில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு உறக்கத்தில் இருந்தன. எந்த வீடும் வெளிச்சமாய் இருக்கவில்லை. பாடசாலையிலிருந்து மூன்று வீடுகள் தள்ளியிருந்த அந்த வீடும் அமைதியாயும் இருளாயும் இருந்தது. வீட்டில் உருவங்கள் சத்தமில்லாமல் நடமாடின. பழகிப் போய் விட்டதால் இருளில் நடமாடுவதற்கு அந்த உருவங்கள் தடுமாறவில்லை.

'அம்மா பயமாய் இருக்கம்மா'

மிக மெதுவாய் அந்தச் சிறுவன் பயப்பிட்டான். 'உஸ்..... பயப்பிடாத ஒண்டும் நடக்காது.' அவன் அருகில் இருந்த அம்மாவின் குரலிலும் கலக்கம் கலந்திருந்தது. கடிகாரம் பெரிதாகச் சத்தம் போடுகிறதோ என்று நினைக்க வந்தது.

'அப்பா எங்கேம்மா?' மீண்டும் மெலிதாக சிறுவனின் குரல் கேட்டது.

'மெல்லமா அப்பா இப்ப வந்திடுவார்.'

நேரம் நீளமாகப் போய்க் கொண்டிருந்தது. எங்கும் அமைதி. எதுவுமே அசையவில்லை. வீடுகளுக்குள் பதுங்கியிருந்த மனிதர்கள் எதையோ எதிர் பார்த்து பயப்பட ஆரம்பித்தார்கள். பயந்து வியர்த்தார்கள்.

'பயமாயிருக்கம்மா...........'

சிறுவன் மறுபடி பயப்பட்டான்.

சிறுவனுக்கு பத்து வயதிருக்கலாம். பெயர் கணேசமூர்த்தி கணேசன் என்றுதான் கூப்பிடுவார்கள். முதலாம் வகுப்பு வரை மட்டுமே ஒழுங்காக படித்திருந்தான். இராணுவ அட்டகாசங்கள் அவன் பாடசாலைக்கு போய் படிப்பதை தடை செய்திருந்தன. இதனால் அவனுக்கு பொது அறிவு போதுமானதாக இருக்கவில்லை. அவனுக்கு எதுவும் புரியவில்லை.

"ஏன் பயப்பிட வேணும்"

"ஆருக்கு பயப்பிட வேணும்"

"ஏன் ஆக்களை சாகக் கொல்லுகிறார்கள்"

எதுவும் அவனுக்கு தெரியாது. யாரும் அவனுக்கு இந்த விபரங்களை தெரிவிக்கவில்லை. தானாக அறிவதற்கும் வயது அவனுக்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து பயம் ஒன்றைத்தான் அவன் பரிபூரணமாக அறிந்திருக்கிறான்.

"கவனமாப் போ!"

"ஆமிக்காரங்கள் வருவாங்கள்"

"ஆமிக்காரங்களைக் கண்டால் ஓடி ஒழி"

ஹெலிகொப்பர் வந்தா மரங்களுக்குக் கீழ போய் நில்"

றோட்டில் ஆக்கள் ஒருத்தரும் இல்லாட்டி பக்கத்தில் இருக்கிற வீடுகளுக்க போய் நில்"

பாடசாலைக்கு போகும், அல்லது வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் இப்படியான எச்சரிப்புக்கள். கவனங்கள், கவலைகள். எவ்வளவுதான்

www.tamilarangam.net



வீறாப்பாகப் போனாலும் பாதையில் காணப்படும் அசாதாரண நிலைமையும், பெற்றோரின் எச்சரிப்புகளும் கணேசனில் பயத்தை உண்டாக்கி விடும். உடனே திரும்பி வந்து விடுவான்.
இந்தப் பயம் சில நாட்களில் நிரந்தரமாகவே மனதைப் பற்றிக் கொண்டது. வீட்டில், பாடசாலையில், பாதையில், கடையில், படுக்கையில் எப்போதும் பயம், பயம், பயம்.அந்தப் பயத்தினால் விஷேச ஜாக்கிரதைகள்.
'பழைய அம்புலிமாமா', ரத்னமாலா க்களில் தேவர், அசுரர் சண்டைகளைப் பற்றி கணேசன் எழுத்துக்கூட்டி வாசித்திருக்கிறான். ஆனால் இப்போது நடக்கும் சண்டை யாருக்கிடையில் என்பதை உண்மையாகவே அந்த சிறுவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை.
ஆமிக்காரங்கள் பொல்லாதவங்கள்'
'ஆக்களைக் கண்டால் சுட்டுப் போடுவாங்கள்."
ஆக்களை கண்டபடி வெட்டுவாங்கள்.'
இவை மட்டுமே கணேசனுக்குத் தெரியும். ஆமிக்காரங்களின் கண்களில் படாமல் தான் தப்பிக் கொள்ள வேண்டுமென்பது அவனுக்குத் தெரிந்தது.
ஆனால் இன்றுவரை ஒரு ஆமியையும் அவன்தன் கண்களால் பார்க்கவில்லை! தங்களை பயப்படுத்துபவர்கள் எப்படி இருப்பார்கள் என்றே தெரியாதிருந்தது.புராண கதைகளில் வரும் அசுரர்களைப் போலவே ஆமிக்காரங்களின் உருவத்தையும் தற்காலிகமாக அவன் கற்பனை செய்து வைத்திருந்தான்.
திடீர், திடீரென தெருக்களில் சனங்கள் ஓடுவதையும், திடீர், திடீரென்று பிரேத ஊர்வலங்கள் போவதையும் வீட்டுக்குள் இருந்தவாறே கணேசன் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போதெல்லாம் அவனுக்குப் பயமாயிருக்கும்.
'நாங்களும் செத்துப் போவோமா?'
தனியே இருக்கப் பயந்து ஓடிவந்து அப்பாவையோ அம்மாவையோ கட்டிப் பிடித்துக் கொள்வான். உடல் நடுங்கும், வியர்க்கும். பிரேத ஊர்வலம் பார்த்த இரவு பயங்கர கனவெல்லாம் வரும்.
சில வேளைகளில் நித்திரையிலே கத்தி விடுவான் விழித்துக் கொண்ட பின் தூக்கமே வராது. படிப்பில்லை, நண்பர்களுடன் விளையாட்டில்லை, வெளியே போய்வரத் துணிவுமில்லை, அனுமதியுமில்லை. கணேசனுக்கு சீ என்றிருந்தது. வேலைக்குப் போவதற்கு அப்பா வெளியே புறப்படுகையில் அவனுக்குப் பீதியாயிருக்கும்.
'அப்பா போகாதையுங்கோ, ஆமிக்காரங்கள் சுட்டுப் போடுவாங்கள்' என்று ஒருநாள் சொல்லி அம்மாவிடமிருந்து நன்றாக அடிகள் வாங்கிக் கொண்டான்.
'சனியன் வெளியில போகேக்க இப்படியே சொல்லுறது."
இதன்பின் கணேசன் வாய்விட்டு எதுவும் சொல்லாவிடினும் அப்பா வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் மனதுக்குள் பயந்து கவலைப் படுவான்.அப்பா திரும்பி வரும்வரையும் வெளிக் கதவருகே காவல் இருப்பான். அவனை பயப்படாதே என்று சொல்லுமளவிற்கு அம்மாவுக்கு தைரியமில்லை, அப்பாவுக்கு நேரமில்லை.
அப்பா எங்கேம்மா?' கணேசன் மறுபடியும் கவலைப் பட்டான்.'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்திடுவார்' அம்மா சுருக்கமாக பதிலளித்தார்.
எங்குமே நிசப்தம், அசாதாரண அமைதி எல்லா வீடுகளிலும் எல்லோரும் ஒரே மாதிரியாக பயந்து போய் இருந்தார்கள், கவலைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். நேரம் போய்க் கொண்டிருந்தது. கணேசன் மீண்டும் ஏதோ கேட்க முயற்சிப்பதற்குள் அம்மா அவனை பேசாமல் இருக்கும்படி சைகை செய்துவிட்டு காதைக் கூர்மையாக்கினாள். தூரத்தில் மிக மெலிதாக அந்த சத்தம் ஆரம்பித்தது. எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட சத்தம்.
அம்மா பரபரப்பானாள், கணேசனை ஒரு கையால் இறுக்கப் பிடிச்சாள், இருளில் அங்கும் இங்கும் மோதியபடி வெளிக் கதவை திறந்து ஓடினாள். கணேசனும் இழுபட்டான். வேலியோடிருந்த வேப்பமரத்தின் அருகே வெட்டப் பட்டிருந்த பதுங்கு குழிக்குள் அம்மா குதிக்க தொடர்ந்து கணேசனும் விழுந்தான்.
"உஸ்.....'மெதுவாக முனகினாள்.
'நோகுதோ?' அம்மா பரிவோடு கேட்டாள்.
முழங்காலில் வந்திருந்த சிராய்ப்புக் காயத்தை தடவியபடியே இல்லையென்றான். சிறிது நேரத்தில் காதை செவிடாக்கும் ரீங்காரம் . இராட்சத பறவைகள் மிகத் தாழ்வாக பறந்து திரிந்தன. குண்டு முட்டைகள் போட்டன. அக்கம் பக்கத்து வீடுகளில் ஆட்கள் பரபரப்பாய் ஓடும் சத்தங்கள். திடீர் திடீரென பெரிய சத்தங்களுடன் நிலம் அதிர்ந்தது. கணேசன் பயத்துடன் அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.
கண்ணைப் பறிக்கும் வெளிச்சங்கள். யார் யாரோ அழும் சத்தங்கள். மீண்டும் மீண்டும் வெடிச்சத்தங்கள் நில அதிர்வும். கணேசன் கண்ணை மூடிக் கொண்டான். அப்போது பயம் இன்னும் அதிகரிக்க உடனே கண்களை திறந்து கொண்டான். நேரம் போய்க் கொண்டிருந்தது....... இருள் முற்றாக பரவியிருந்தது. காலில் ஊர்ந்த ஏதோ ஒன்றைக் கணேசன் உதறினான்.
பூச்சியோ? மட்டத்தேளோ?, பாம்பும் வருமா? எதற்குப் பயப்படலாம்? பயப்படாமல் இருக்கவே முடியாதா? வியர்வையில் மண் ஒட்டி உடம்பு முழுதும் பிசுபிசுத்தது. கற்கள் குத்தி வலித்தன. நன்றாக இருக்கவும் முடியாமல் அவர்கள் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

1987. மே. 23, பதுங்கு குழி
வெளிச்சம் தயங்கியபடி பிரவேசித்தது. தூங்காத கண்களுடன் கணேசனும் அம்மாவும் கூசினார்கள். "அப்பா எங்கேம்மா?" அன்றைய முதல் கேள்வியை கேட்டான் கணேசன். "மாமா வீட்டில நிண்டிருப்பார், இண்டைக்கு கட்டாயம் வருவார்" மகனுக்கு சமாதானம் சொன்னாலும் அவர் எங்கே? என்ற கேள்வி அவளைக் கலங்க வைத்தது.

"வீட்டுக்கு போவோமா?" கணேசன் கேட்டான். "கொஞ்சம் பொறு" என்று அம்மா காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

www.tamilarangam.net



வித்தியாசமான சத்தங்கள் எதுவும் கேட்காததால் “எழும்பு போவோம்” என்றாள்.
முதலில் அம்மா பலமுறை சறுக்கிய பின் வெளியே வந்தாள். சற்று தூரத்தில் குவியல்களாக கிடந்த கடதாசிகள் அவளைக் கவர அவற்றை நோக்கி போனாள்.
“அம்மா என்னை தூக்கி விடுங்கோ” கணேசன் பதுங்கு குழிக்குள் இருந்து குரல் கொடுத்தான். குவியல்களில் இருந்து ஒன்றை எடுத்துப் பார்த்த அம்மா திடுக்கிட்டாள். நான்கு நாட்களுக்கு தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் பட்டிருப்பதாகவும், வெளியே நடமாடுவோர் சுடப்படுவார் என்றும் சுத்தமான தமிழில் எழுதப்பட்டிருந்தது.
மறுபடியும் வானத்தில் ஆரவாரம்......!
விமானங்கள் தெரிய ஆரம்பித்தன. அம்மா திரும்பவும் பதுங்கு குழிக்குள் இறங்கினாள். “என்னம்மா” கணேசன் பதட்டத்தோட கேட்டான். “ஒருத்தரையும் வெளியில் திரிய வேண்டாமாம் கண்டா சுட்டுப் போடுவாங்களாம்”.
கணேசனுக்கு ஏன் என்று கேட்கத் தெரியவில்லை. இருவரும் அப்படியே இருந்தார்கள். விமானங்கள் வந்தன, குண்டுகள் போட்டன, பறந்து போயின. விமானங்கள் வந்தன, குண்டு........

1987. மே. 24, பதுங்கு குழி
கணேசனும் அம்மாவும் சோர்ந்து போயும் களைத்துப் போயும் இருந்தார்கள். தூங்காத கண்கள் சிவப்பாகியிருந்தன. எறும்புகள் கடித்ததால் உடம்பில் ஆங்காங்கே பரவலாக மேடுகள் உண்டாகி இருந்தன. கணேசன் கொட்டாவி விட்டான். இது எத்தனையாவது என்று அவனுக்கு மறந்து போய்விட்டது. அவனுக்கு பசித்தது, நன்றாகப் பசித்தது. தலையைச் சுற்றியது தூக்கம் வந்தது.
இவையெல்லாவற்றையும் மீறி பயம் நிறைந்திருந்தது. அம்மாவுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. அவன்தான் என்ன செய்ய முடியும்? வெளியில் போகச் சுட்டுக் கொன்று விடுவார்களே. கவசவாகனங்களின் இரைச்சல் கூட மிக துல்லியமாக கேட்டது. இராணுவம் அருகாமையில் வந்து விட்டதை அவள் அறிந்து கொண்டாள்.
யுத்த ஆரவாரம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன. இராணுவத்தின் பிடிக்குள் தாம் சிக்கிக் கொண்டதாக எல்லோரும் அனுமானித்துக் கொண்டார்கள்.
கணேசனுக்கு பசி வயிற்றைப் பிராண்டியது, உடம்பெங்கும் எரிந்தது, தலை சுற்றியது அம்மா அவனைப் பார்த்து கவலைப் பட்டுக்கொண்டிருந்தாள். பகல் போய் இரவு வந்தது. அவர்கள் அப்படியே இருந்தார்கள்.

1987. மே. 25, பதுங்கு குழி
வெடிச்சத்தங்களுடன் விடிந்தது. கணேசன் சுருண்டு படுத்திருந்தான். கண்கள் அரைகுறையாக மூடியிருந்தன.
அம்மா அவனைப் பரிவுடன் தடவினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடம்பு மிக வெப்பமாக இருந்தது. நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அங்கும் அதே வெப்ப நிலைதான் காச்சலா? அவன் தலையைத் தூக்கி மடியில் வைத்தாள். "என்ன செய்யுது ராசா?"
'பசிக்குதம்மா.....' கணேசன் மெலிதாக முனகினான். அம்மா கொஞ்ச நேரம் யோசித்தாள் அவனை மெதுவாக தூக்கி மண்ணில் படுக்க வைத்து விட்டு பதுங்கு குழியிலிருந்து வெளியே வந்தாள். யாரும் இல்லை. வேகமாக வீட்டினுள் ஓடினாள். சமையலறையில் புகுந்து சாப்பாடு தேடினாள். கொஞ்சத் தாமதத்தின் பின், டிஸ்பிறின் அகப்பட்டது. எல்லாவற்றுடனும் வெளியே வரும்போதுதான் அவள் கவனித்தாள்.
சின்ன இடைவெளிக்கு அப்பால் நீட்டிய துப்பாக்கிகளுடன் இராணுவம் வந்து கொண்டிருந்தது. கணேசனுக்கு நா வரண்டது தலை பாரமாக இருந்தது.
"அம்மா" என்று முனகினான். சிரமப்பட்டு தலையைத் தூக்கிப் பார்த்தான். அம்மாவைக் காணவில்லை! '
'அம்மா' என்று கூப்பிட்டான். அவனுடைய குரல் அவனுக்கே கேட்கவில்லை. கண்கள் நன்றாக திறக்க முடியவில்லை. உடம்பு முழுவதும் கொதித்தது. சில எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன.... 'அம்மா எங்கே' அவனுக்கு பயமாகவும், கவலையாகவும் இருந்தது. அம்மாவுக்காகக் காத்திருந்தான்.
அம்மா வரவில்லை 'அம்மா எங்கே?' பயம் அவனைக் கலவரப்படுத்தியது.
'அம்மாவை ஆமிக்காரன் பிடிச்சுக் கொண்டு போட்டானோ?'.
'இனி நான்தானே, அடுத்ததாய் என்னைத்தானே பிடிப்பாங்கள்!
பிடிச்சா சுட்டுப் போடுவாங்களோ?'
பயம்.......
பயம்.......
அழுகையும் வந்தது. இந்த இடம் போதுமான பாதுகாப்பாக இல்லையென்று கணேசன் நினைத்தான். வெளியில போகேலாது அங்க ஆமிக்காரங்கள் கட்டாயம் நிப்பாங்கள்.
'அப்ப என்ன செய்யலாம்? இன்னும் கீழே ஆழத்துக்குப் போக வேணும்....'
'நல்ல ஆழத்துக்குப் போகவேணும்'.

கணேசன் தன்னை சுதாகரித்துக் கொண்டான். சின்னக் கைகளால் மண்ணைத் தோண்ட ஆரம்பித்தான். தலை கனத்தது. கண் எரிந்தது. பசித்தது. ஆனாலும் கணேசன் மண்ணைத் தோண்டிக்கொண்டிருந்தான். அவன் தப்பியாக வேண்டும்.
சின்னக் கைகளில் மெல்ல மெல்ல இரத்தம் கசிந்தது.

*நன்றி அம்மா (2), ஆனி 97. பிரான்ஸ்*

www.tamilarangam.net



## பத்திரிகைச் சுதந்திர அத்து மீறல்கள் உலக அறிக்கை

உலகளாவிய பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய ஏழாவது ஆண்டறிக்கையை (Rapport annuel Sur la liberte de la.presse dans la monde) பன்னாட்டுச் செய்தியாளர்கள் என்ற அரசு சார்பற்ற பிரஞ்சு அமைவனம் வெளியிட்டுள்ளது. உலகில் 149 நாடுகளில் தகவல் அறிவிப்பதற்கும், தகவல் பெறுவதற்குமான உரிமை மீறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன. 1995இல் 51 பத்தரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 400 இதழாளர்கள் தங்கள் பணியைச் செய்ததற்காக அல்லது தங்கள் நாட்டு ஆட்சியாளர்களின் கருத்துக்கு மாறாக கருத்துக்களை வெளியிட்டதற்காகச் சிறையிலடைக்கப்பட்டனர். இரண்டு புதுவிதமான அடக்கு முறைகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று அரசியல் நலன்களுக்காக நீதித்துறையை அடிபணியச் செய்தல், இன்னொன்று பத்திரிகைச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சட்டச் சீர்திருத்தங்களைச் செயற்படுத்துதல், கிழக்கு ஐரோப்பா, சகாராவை ஒட்டிய ஆபிரிக்கா, வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆகிய பகுதிகளிலுள்ள பல நாடுகளில் இந்த அடக்கு முறைகள் கையாளப்படுகின்றன.

*( நன்றி யுனெஸ்கோ கூரியர் டிசம்பர் 1996)*



## வாங்கி விட்டீர்களா?

வாங்கிப்படித்து விட்டீர்களா?

வேலணையூர் பொன்னண்ணாவின் இரண்டாவது வெளியீடு

# வெந்தவனம்

கவிதைத் தொகுதி

இன்னும் தவறியோர்கள் . . .

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

தொலைபேசி **75 33 87 92**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விழா விமர்சனம் (பிழை திருத்தம்)

கடந்த கற்பகம் இதழ் 12ல் (29 -31) பக்கங்களில் (நிறைவு கொண்ட ஒரு இலக்கிய விழா) என்ற தலைப்பில் வேலணையூர் பொன்னண்ணாவின் இரண்டாவது வெளியீடான வெந்தவனம் கவிதைத் தொகுதி வெளியீட்டுரை நிகழ்த்திய முல்லையூரான் அவர்கள் தனதுரையில் வெந்தவனம் நூலுக்கு முன்னுரை வழங்கிய கவிஞர் ஆதவன் அவர்கள், "நாடறிந்த பொன்னண்ணா" என எழுதியுள்ளார் எனக் குறிப்பிட்டார்.
*(மேற் கூறப்பட்டவை சென்ற இதழில் கவிஞர் ஆதவன் தனதுரையில் கூறப்பட்டதாக வெளியிடப்படுள்ளது. இந்தப் பிழையினை எங்களுக்கு அறியத்தந்தவர்களுக்கு கற்பகம் நன்றி கூறுகின்றது)*

இதற்கு மேலாக முல்லையூரான் அவர்களால் மேழிச்செல்வி என்ற பெயரில் கவிதைக்கானல் நிகழ்ச்சி ஒன்றும் இடம் பெற்றது. இந்த கவிதைக்கானல் நிகழ்ச்சியானது மக்கள் மனதைமிகவும் கவர்ந்த நிகழ்ச்சியாகும். ஏன் இதனைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்ற வாசகர்கடிதங்கள் எங்களுக்கு வந்தன.

*(தவறுகள் ஏற்பட்டமைக்கு கற்பகம் ஆசரியர் குழு மனம் வருந்துகின்றது.)*

### வெந்தவனக் காற்றடித்து............!

அன்றொரு நாள்........!
வீட்டுமதில் நீண்டசுவர் –
நீள்வரிசை தன்னில்
பூத்ததுவோ.....!
செவ்வந்தி, சிதம்பரத்தை
வீட்டு கூட்ட், அதனில்,
குவிந்ததுவோ முல்லை, மல்லகை.
நாட்டிடையே கண்சிலிர்க்க
நன்சை, புஞ்சை கதிர்கொடுக்க
ஊர்பெருமை தான் கூறி....
உயர்கோவில் மணியொலிக்க
நந்தவனமன்றோ எம் மண்
நந்தவனமன்றோ எம் மண்.

இன்றதுவோ......!
செத்த உடல் சுட்டெலிக்கும்
செம்படவன் காடாய் தீய்ந்து.....
வெந்தவனமானதன்றோ.....!
வெந்தவனமானதன்றோ....!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்தவனம் தானெழுந்து...
அடிக்கும் போர்க் காற்றினிலே...
சிக்கி, சிதறி, சிதைபட்டு, சீரழிந்து...
பட்ட துயர், மக்கள் படுந்துயரை.....
பாருக்குத்தானுரைக்க..
வெந்தவனக் காற்றினிலே...
பறந்து வந்த பத்திரிகைத் துண்டொன்று
சொன்னகதை என்கவியில் சொல்லிடுவேன்.
சபையோரே செவிமடுத்து.....
செங்குருதிதனைக் கலந்து....
பதித்திடுங்கள் இதயமதில்
பதித்திடுங்கள் இதயமதில்

பட்ட மரம் வெட்டுண்டால் –
பாதகம் இல்லையென்போம் – எம்
பாதமதை கிழிக்கின்ற....
முள்ளுமரம் வெட்டுண்டால்
முகமலர்ச்சி தான்கொள்வோம்
ஆனால்....! ஆனால்.....!
அந்தோ....!! எம்தாய்மண்ணில்
பச்சை பிஞ்சுகளும், கனிகொண்ட
மா, வாழை, பலா மானிடமும்...
பாதகரால் அழிகையிலே...
பாத்திருக்க முடிகிறதா..? முடிந்திடுமா...?
நேசக் கரம்நீட்டி – – !நீவீர் உதவி தாரீரா..?

விதைபோட்ட அப்பாவும்
பயிர்வளர்த்த அம்மாவும்...!எம்மை
வேலியாய்க் காத்திருந்த...
குருதி உறவுகளும்," புக்காரா" கொட்டிய
குண்டுக்கள் துளைத்தபின்னும்
வாழத்தான் நினைக்கின்றோம

வழிகாட்ட யாருள்ளார்
பள்ளிக்கு போகையிலும்
பயமெநமை துரத்துகுது
அடியெடுத்து வைக்கையிலும்
அடிநெஞ்சில் குத்துகுது..!
புதியதொரு பயிரொன்று..

புதைந்திருக்காம் எம்மண்ணில்
எம்முயிரை பறித்திடவே..!எமனாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதுநேரம் பார்த்திருக்காம்..!
என்நேரம் அதுவருமோ...!
என்றாலும் படிக்கினறோம்..ஏன் என்றால்..!
நீங்கள் அடையாளம் காண்பதற்கு.

கப்பல் நாளென்று
காத்திருக்கும் எங்கள் கண்கள்
எப்பவரும் எமக்குணவு....
ஏங்கி நிற்கும் எம் வயிறு...
கப்பல் வரும் கரை சேரும்
காத்திருக்கும் கண்களெல்லாம்
கப்பல் இறங்குதுறை எட்டிநிற்கும் – அங்கே
கனத்தகுண்டு ஆயுதங்கள்...!
படைக்கலங்கள் தானிறஙகும்
துடிக்காதோ எம் பசிவயிறு...!?
இடிக்காதோ எம் நெஞ்சம்...!?

ஆனால்...!
வெள்ளைப் புறா அனைத்தும்
வெடிபோட்டு அழித்துவிட்டு
கழுதை நிறம் மாற்றி.........
கதைக்க அனுப்பி விட்டு
தீர்வென்றும் திட்டமென்றும்
பேச்சென்றும் காதில் பூ சுத்துகிறார் – எம்
நோய்க்கு மருந்தனுப்பா சித்தாத்தர் ஆட்சி
அகிலத்தை ஏமாற்றும் ஆழ்வோர் செயலறிந்து
உலகறிய செய்வீரா..? எம் உதிர உறவுகளே...!?
உலகறிய செய்வீரா...? எம் உதிர உறவுகளே...!?

தொத்திய நோய்க்கு மருந்தின்றி
துடிதுடித்து ஒரு கன்னி தொலைந்து போக
கொடியான் கரம் பட்டு சிதைவுற்ற.....
குமரியொருத்தி குழிக்குள் புதைந்து போக
கருக்கொண்ட தாயொருத்தி நல்ல
மருந்தின்றி மடிந்துபோகும் வேளையிலும்
கொள்கைக்கு உரம்போட்டு நாங்களும் தான்
குடியிருக்கோம் எதற்காக......?உங்கள்
எதிர்கால சந்ததிகள் ஏற்றமுடன் தலைநிமிர
எண்ணி இதையுணர்ந்து எங்களுக்கு.......
உங்கள் கரம் நீளாதா உதவிடவே......?

www.tamilarangam.net



கொள்ளிக்கு பிள்ளையென்று
குருதி கொட்டி வளர்த்த பெற்றோர்
சவமேடு தனைப்புரட்டி.....!
தன்பிள்ளை தனைத்தேடி....
நெஞ்சிலே விழுப்புண் கண்டு
குருதிநீர் தனைக் கொட்டி — — கொண்ட
கொள்கையிலே நிமிர்த்துகின்றார் தலையை..!
ரணகள பாதையிலே செல்லுகின்றார் கொள்ளியுடன்

அன்னை மொழியைக் காப்பதற்கு
அணிகொண்டேகி பகைமுடிக்க
எம்மண் மீட்பில் எதுவரினும்
எதிர்கொண்டேற்று..! வெற்றி கொள்ள
எங்கள் உறவு, உங்கள் குருதி...
எங்கள் கரமே பற்றி நின்றால்
வண்ணம்பாடி வழிகொண்டு
வருவோம் அன்னை அரியணையோடு...!

செண்டுக்குத் தான் ஆசை பூப்பூக்க...
வண்டுக்குத் தான் ஆசை மதுவுண்ண..
அருவிக்குத் தான் ஆசை ஆற்றில் சேர....
ஆற்றுக்குத் தான் ஆசை கடலில் சேர....
இவையெல்லாம் இயற்கையின் நியதியென்றால் . . .
போராளி எனக்காசை எதிராளி படைமுறிக்க...
தள்ளுங்கள்..... !தள்ளுங்கள்....! தடுக்காதீர்...!
தழுவட்டும்...!குண்டெம்மை
தமிழ்த்தாயின் அரியணையை
தான் மீழ்ப்போம்...!தான் மீழ்ப்போம்..!
எங்கள் குருதிகளே...! உங்கள் பணிமுடிக்க...!
எங்கள் உணர்வலையில்..! எண்ணைதனை ஊற்றிடுங்கள்

*கவியரங்கக் கவிதை*
*வேலணையூர் பொன்னண்ணா*

## பாலர் தமிழ் வீடியோ...

பாலர்களுக்கான விசேட தமிழ் வீடியோ பற்றிய விபரங்களை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருஞானசம்பந்தர்

(சென்ற இதழ் தொடர்ச்சி......)

-அருண்-

அப்பால் கொங்க தேசத்தை அடைந்தார். திருச்செங்கோட்டில் இருந்தபோது அவருடைய திருக்கூட்டத்தார் பனி மிகுதியால் சுரங்கண்டு வருந்தினர். பிள்ளையார் திருநீலகண்டப் பதிகத்தைப்பாடி பனிப்பிணியை அந்த நாடு முழுவதும் தீர்த்தருளினார். மற்றும் பல திருத்தலங்களுக்கும் சென்று திருநீலநக்கர், சிறுத்தொண்டர் முதலியவர்களுடன் கலந்திருந்து அவர்களைத் திருப்பதிகங்களிலே சிறப்பித்துப் பாடினார். சில நாட்களின் பின் திருமருகலுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருந்தார். அங்கே ஒருவன் பாம்பு கடித்து இறந்தான். அவனுடன் வந்திருந்த அவன் மாமன் மகளாகிய கன்னிகையின் துக்கத்தை நீக்கத் திருவுளங் கொண்டு ஒரு திருப்பதிகம் பாடியருளினார் உடனே அவ்வணிகன் உயிர்ப்பித்து எழுந்து பிள்ளையாரை வணங்கினான்.

. பின்னர் திருப்புகலூருக்குச் சென்று அத்தலத்து முருக நாயனாருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார். பின் அப்பர் சுவாமியைச் சந்தித்து அவருடன் திருவீழிமழலையை அடைந்தார். அப்போது பஞ்சம் உண்டாகிப் பலரைப் பசிநோய் வருத்தியது. சிவபெருமான் பிள்ளையாருக்கும் அப்பருக்கும் தனித்தனி ஒவ்வொரு பொற்காசு ஒவ்வொருநாளும் அக்கோயிலில் வைத்தருளினார். அக்காசைக் கொண்டு இருவரும் தமது திருக்கூட்டத்தாருக்குக் குறைவின்றி திருவமுது செய்வித்து வந்தனர். சில தினங்களுக்குப் பின் இருவரும் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு வேதாரணியத்திற்குப் போனார்கள். அங்கே இருந்த காலத்திலே மதுரையில் இருந்து பாண்டியனுடைய மனைவியாராகிய மங்கையற்கரசியாரும் முதன் மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் அனுப்பிய சில தூதுவர்கள் வந்து பாண்டிய நாட்டிலே சைவசமயம் குறைந்ததாகவும், சமணசமயம் பரவி இருப்பதாகவும், சுவாமிகள் மதுரைக்கு எழுந்தருளிச் சைவ சமயத்தை நிலைநாட்ட வேண்டியது அவசியம் என்றும் முறையிட்டார்கள்.

பிள்ளையார் அப்பர் சுவாமிகளை வேதாரணியத்திலேயே இருத்தித் தாம் மதுரையை நோக்கிப் புறப்பட்டார். பிள்ளையாரின் வருகையைக் கேள்விப்பட்ட குலச்சிறையாரும் பாண்டிமாதேவியாரும் அவரை எதிர் கொண்டனர். அவர்கள் இருவரது அருமைத் திருத்தொண்டை ஒரு திருப்பதிகத்தில் சிறப்பித்துப் பாடினார். அப்பாடல்.

**மங்கையற்கரசி வளவர் கோன் பாவை**
**வரிவளைக் கைம்மட மானி**
**பங்கயச் செல்வி பாண்டிமாதேவி**
**பணிசெய்து நாடொறும் பரவப்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பொங்கழலுருவன் பூத நாயகனால்**
**வேதமும் பொருள்களுமருளி**
**அங்கையற்கண்ணி தன்னொடுடமர்ந்த**
**வாலவாயாவது மிதுவே!**

மதுரைக்குப் போய்ச் சிவபெருமானைத் தரிசித்து ஒரு திருமடத்தில் தம்முடைய திருக்கூட்டத்தாருடன் எழுந்தருளியிருந்தார். பிள்ளையாரையும் அவருடைய திருக்கூட்டத்தாரையும் கண்ட சமணர்கள் பொறாமை கொண்டு பாண்டியனிடம் முறையிட்டார்கள். பாண்டியன் அச்சிவனடியார்களை மதுரையிலிருந்து விரட்டி விட உபாயம் யாதென்று அவர்களையே கேட்டான். அவர்கள் நாயனார் வசித்த மடத்தில் நெருப்புப் பற்ற வைப்பதே தகுதியென்று கூறினர் அரசன் அதற்குச் சம்மதிக்க, சமணர்கள் பிள்ளையாருடைய திருமடத்திலே நெருப்பைக் கொழுத்தினார்கள். மடத்தில் இருந்த திருக்கூட்டத்தார்கள் விரைவாக நெருப்பை அணைத்தார்கள். பிறகு பிள்ளையாரிடம் முறையிட்டார்கள். அச்செயல் அதி பாதகமானதால் பிள்ளையார் அரசனைத் தண்டித்து அவனது கர்மத்தைத் தொலைத்ததற்காக 'செய்யனே திருவாலவாய்' என்னும் திருப்பதிகம் பாடியருளினார். உடனே பாண்டியனுக்கு வெப்பு நோய் உண்டாகியது. சமணகுருமார்கள் பல வைத்தியங்கள் செய்தும் அந்நோய் நீங்கவில்லை. மங்கையற்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் திருஞானசம்பந்த சுவாமிகளை வரவழைத்தால் வெப்புநோய் தீருமென்று சொன்னார்கள். அதற்குப் பாண்டியன் சம்மதித்தான். அவ்வாறே சுவாமிகளைப் போய் அழைக்க அவர் சிவபெருமானுடைய சந்நிதானத்திற்குப் போய் வணங்கிக் கொண்டு பாண்டியனுடைய மாளிகையைப் போய் அடைந்தார். சுவாமிகளின் வருகையைக் கண்ட சமணர்கள் மனம் வருந்தி அவரை வாதுக்கு அழைத்தனர். பாண்டியன் பிள்ளையாரையும் சமணர்களையும் நோக்கித் தன்னுடைய நோயை யார் விரைவாகத் தீர்க்கிறார்களோ அவர்களே வென்றவர் என்றான்.

பின்னர் சமணர்கள் பாண்டியனது இடப்பக்க நோயை தாங்கள் தீர்ப்பதாகவும், மற்றப் பக்கத்து நோயை பிள்ளையார் தீர்க்க வேண்டும் என்றும் பேசிக்கொண்டார்கள். அப்படியே பாண்டியனது இடப்பக்கத்தை மயிற் பீலியினாலே தடவி மந்திரம் செபித்தனர். வெப்புநோய் அதிகரித்ததேயன்றிச் சிறிதும் குறையவில்லை. வலப்பக்கத்திலே பிள்ளையார் திருநீற்றுப் பதிகம் பாடி விபூதி பூசிய அளவில் நோய் தீர்ந்தது. இடப்பக்கத்து நோயைச் சமணர்கள் தீர்க்க முடியாமையால் பிள்ளையாரே அதனைத் தீர்த்தருளினார். உடனே பாண்டியன் சைவ சமயத்தைத் தழுவினான்.

*தொடரும்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுவர் பகுதி

அன்பான மாணவர்களே, மழலைகளே,

இந்த மாதிரி வினாத்தாள் மூலம் உங்களை சிறுவர் பகுதி அங்கத்திற்கு அழைக்கிறேன். இவ்வகையான மாதிரி வினாத்தாள் உங்களை பரீட்சைக்கு தயாராக்கவும், தெரியாத விடயங்களை உட்கிரகிக்கும் நுழை வாயிலாகவும் உள்ளது. 1998ம் ஆண்டு புரட்டாதி மாதம் நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கு இவ்விதமான கேள்விமுறைகளையே நாம் பெரிதும் பயன்படுத்துவோம் என்பதை மாமா தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றார்.

7 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான போட்டிப் பரீட்சை ஒன்று இடம் பெறும் என்பதனையும் அறியத்தருகிறோம்.

மாணவர்களே, மழலைகளே, உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் எற்படின் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தொடர்பு கொண்டால் விடையை மிக விரைவில் மாமா எழுதி அனுப்புவார்.

அத்துடன் உங்களது விடைகளை, மிகவும் தெளிவாக எழுதி கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பினால், **Children Chanal** மாமா திருத்தி அனுப்பி வைப்பார்.

**அனுப்ப வேண்டிய முகவரி: –**

**Children Chanal**
**Svendsgade 58**
**7100 Vejle.**

**1) பின்வரும் படங்களை (42ம் பக்கத்தில்) மனதில் கொண்டு கீழே வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**


1. மேலே உள்ள படத்தில் நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்கள்?
2. இவைகள் எவற்றை விரும்பி உண்ணுகின்றன?
3. இப்படத்தில் நீர் எவற்றை விரும்பித் தெரிவு செய்வீர்?
4. நீர் விரும்பித் தெரிவு செய்ததைப்பற்றி ஐந்து வசனம் எழுதுக?
5. இந்தப் படத்திற்கு என்ன தலையங்கம் வைக்கலாம்?




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**2). மேலே உள்ள படங்களை (42ம் பக்கத்தில்) மனதில் கொண்டு பின்வருவன சரியாயின் சரியின் கீழும், பிழையாயின் பிழையின் கீழும் கோடிடுக.**

1. இந்தப் படத்தில் கமக்காரன் வயலை உழுகின்றான்.
   (சரி, பிழை)
2. பறவைகள் கமக்காரனை துரத்திக் கொத்துகின்றன.
   (சரி, பிழை)
3. இந்தப் படத்தில் நாய்கள் காணப்படுகின்றன.(சரி, பிழை)
4. இப்படத்தில் பல வீடுகள் காணப்படுகின்றன.(சரி, பிழை)
5. பறவைகள் கமக்காரனுக்கு நன்மை பயப்பனவாகும்.
   (சரி, பிழை)

**3. கீறிட்ட இடத்தில் ஏற்ற எழுத்தை வைத்து நிரப்புக.**

உ ம் : – ம்மா : அம்மா. –னிப்பு. :இனிப்பு.

1. –ம்பு. 2. –ப்பல். 3. கு–ங்கு. 4. –காயம். 5. ஏ–
6. இரு–ல். 7. கண்–டி. 8 பா–சாலை. 9. அ–னம்.
10. பற––. 11. ஆகா–ம். 12. பாம்–. 13. ப–. 14. பன்–.
15. –ரிசி. 16. ஆ–. 17. முய–. 18. விர–. 19.கத–.
20. பா–.

**4.பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. உமது உடம்பில் உள்ள உறுப்புக்கள் பத்து எழுதுக?
2. உமக்குத் தெரிந்த வாகன வகைகள் ஐந்து எழுதுக?
3. உமக்குத் தெரிந்த உறவு முறைகள் ஐந்து எழுதுக?
4. உமக்குத் தெரிந்த பறவை இனங்களின் பெயர்கள் 5 தருக.
5. இவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 10 வசனங்களுக்கு குறையாமல் எழுதுக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**5. அன்பான தம்பி தங்கைகளே மாமாவுக்கு கோடை விடுமுறை காரணமாக மிகுதியை எழுதி முடிக்க முடியாமல் போய்விட்டது. எனவே நீங்கள் மிகுதியை எழுதி முடித்துவிட்டு மாமாவுக்கு அனுப்பிவைப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.**

அன்புடன் மாமா,

ஒரு காட்டில் பாழடைந்த வீடு ஒன்று காணப்பட்டது. அங்கே சனநடமாட்டம் மிக மிகக் குறைவு. இரவு வேளைகளில் அலறல் சத்தம் மட்டும் கேட்கும். அந்த அலறல் சத்தம் கேட்கும் நாட்களின் பின் ( ஒரிரு தினங்களின் பின் ) துர் நாற்ற வாசனை காற்றோடு கலந்து வந்து எமது மூக்கினுள் நுழையும். ஒரு நாள் நானும் எனது தங்கை டெனிசியாவும் அந்தக் காட்டினுள் சென்றுவர முடிவு செய்தோம். அதற்காக ஒரு டோச் லைற்றும் பெரிய கயிறும் கத்தி ஒன்றும் எமக்குத் துணையாக எடுத்துச்செல்ல முடிவுசெய்தோம். எனது தங்கை மிகவும் பயந்த சுபாவம் உள்ளவள். ஒரு மாதிரி உற்சாகம் ஊட்டி அவளையும் என்னுடன் சேர்த்துக்கொண்டேன். நாங்கள் புறப்படத் தயாராகும் நேரத்தில் காட்டின் ஒரு ஓரத்தில் இரத்தம் படிந்த ஒரு சடலம் (இறந்த உடல் ஒன்று) காணப்பட்டது. எனது தங்கை அந்தச் சடலத்தைப் பார்த்தவுடன் பயந்து விட்டாள். . . . . . . (மிகுதியை மாமாவுக்கு எழுதி அனுப்புங்கள்.)

**6) கீழே இருக்கும் வசனப்பகுதியை நன்கு வாசித்து விளங்கிய பின் தரப்பட்ட கேள்விகளுக்கு விடை எழுதுக.**

!!யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே!!
!!ஆனைக்கும் அடி சறுக்கும் !!

1. யானை எப்படிப்பட்ட மிருகம்? . . . . . . . . . . . . . . . . . .
2. யானை எங்கே பிடிக்கப்படுகின்றது? . . . . . . . . . . . . . . .
3. யானையின் உணவு யாது? . . . . . . . . . . . . . . . . . . .
4. யானையின் கைக்குப் பெயர் என்ன? . . . . . . . . . . . . . .

www.tamilarangam.net



5. யானையை ஏன் பிடித்துப் பழக்குகின்றார்கள்? . . . . . . . . .
6. யானையைச் செலுத்துபவனின் பெயர் என்ன? . . . . . . . . .
7. யானைத் தந்தம் எதற்கு உபயோகிக்கப்படுகின்றது? . . . . .
8. யானையின் காது எதனைப் போன்றது? . . . . . . . . . . . .

**7.) பின்வரும் சொற்களை அமைத்து ஒவ்வொரு வசனம் எழுதுக.**

உதாரணம்: பசு. பூக்கள்.
பசுவின் பால் மிகவும் இனிமையானது.
பூக்கள் மிக அழகானவை.

புத்தகம்:---------------------------------
மலை:---------------------------------
தண்ணீர்:---------------------------------
மணி:---------------------------------
குளிர்:---------------------------------

**8) காலம் : இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம்.**

முன்பு நடந்த செயலைக் காட்டுவது **இறந்தகாலம்.**
தற்பொழுது நடக்கும் செயலைக் காட்டுவது **நிகழ்காலம்.**
இனிமேல் நடக்கப்போகும் செயலைக்காட்டுவது **எதிர்காலம்.**

உதாரணம்: படித்தான் என்பது இறந்தகாலம்.

படிக்கிறான் என்பது நிகழ்காலம்.

படிப்பான் என்பது எதிர்காலம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கீழே தரப்படும் சொற்களை காலத்தின்படி பிரித்து எழுதுக.

செய்தான். எழுதினான். பார்ப்போம். நடப்போம்.
ஓடுவான். புளித்தது. நடப்பான். வருவார்.
குடிக்கிறேன். உடுத்தாள். இருக்கிறது. சிரிக்கிறாள்.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

9) சிதறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

உதாரணம்: எலுமிச்சம்பழம், இருக்கும், புளிப்பாய்.
எலுமிச்சம்பழம் புளிப்பாய் இருக்கும்.

1. இருக்கும், இனிப்பாய், தேன்.

   ---------------------------

2. இருக்கும், மிளகாய், உறைப்பாய்.

   ---------------------------

3. போவாள், கீதா, பாடசாலைக்கு.

   ---------------------------

4. வாங்கினேன், நான், கடையில், பொருட்கள்.

   ---------------------------

5. தண்ணீர், குடித்தேன், நான்.

   ---------------------------

10.) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் எழுதுக.

உதாரணம்: இறப்பு – பிறப்பு.
ஏறு – இறங்கு.

புதுமை ---------- அமைதி ----------



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
| பள்ளம் | ---------- | அழுகை | ---------- |
| போனான் | ---------- | சுத்தம் | ---------- |
| உயர்வு | ---------- | இறக்கம் | ---------- |
| இன்பம் | ---------- | நியாயம் | ---------- |

**11. கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.**

1. நான் காலை பாடசாலைக்குப்-------------.(போனேன் போகின்றேன், போவேன்)
2. நாங்கள் எல்லோரும் இருந்துபடம்---------. (பார்ப்போம், பார்க்கின்றோம்)
3. நீங்கள் ஏன் ----------? (வருவீர்கள், வந்தீர்கள்)
4. சூரியன் ----------த் திசையில் உதிக்கும். (மேற்கு, கிழக்கு, வடக்கு)
5. நானும் நீயும் ----------. (போனேன் போனோம்)

**12. பின்வரும் முறைப்பெயர்களுக்கு ஆண்பாற்சொற்கள் எழுதுக**

1. சகோதரி ------------------
2. தங்கை ------------------
3. மாமி ------------------
4. தாய் ------------------
5. பாட்டி ------------------
6. அக்கா ------------------

**13. கீறிட்ட இடத்தில் ஏற்ற சொல் வைத்து எழுதுக.**

1. ------------ உதிக்கிறது.
2. ------------ எரிகிறது.
3. ------------ பெய்கிறது.
4. ------------ ஓடுகின்றது.
5. ------------ குரைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும் விசேட இந்து தினங்கள்

| ஆங்கிலம் | தமிழ் | கிழமை | வரதாநிதி நிரூபணம் |
|---|---|---|---|
| September | புரட்டாதி | | |
| 20.09.97 | 5 | சனி | புரட்டாதி சனிக்கிழமை விரதம் |
| 27.09.97 | 12 | சனி | புரட்டாதி சனிக்கிழமை விரதம் |
| October | | | |
| 01.10.97 | 16 | புதன் | அமாவாசை விரதம் |
| 02.10.97 | 17 | வியாழன் | நவராத்திரி விரதாரம்பம் |
| 04.10.97 | 19 | சனி | புரட்டாதி சனிக்கிழமை விரதம் |
| 05.10.97 | 20 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| 08.10.97 | 23 | புதன் | சரஸ்வதி பூசை ஆரம்பம் |
| 10.10.97 | 25 | வெள்ளி | சரஸ்வதி பூசை |
| 11.10.97 | 26 | சனி | புரட்டாதி சனிக்கிழமை விரதம், விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம். |
| 14.10.97 | 29 | செவ்வாய் | நடேசுவர அபிசேகம் |
| 15.10.97 | 30 | புதன் | பூரணை விரதம் |
| | ஐப்பசி | | |
| 30.10.97 | 14 | வியாழன் | தீபாவளி |
| 31.10.97 | 15 | வெள்ளி | அமாவாசை விரதம், கேதாரகௌரி விரத முடிவு. |
| November | | | |
| 01.11.97 | 16 | சனி | கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 04.11.97 | 19 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 06.11.97 | 21 | வியாழன் | சூரசங்காரம் |
| 07.11.97 | 22 | வெள்ளி | திருக்கல்யாணம் |
| 14.11.97 | 30 | வெள்ளி | பூரணை விரதம் |
| | கார்த்திகை | | |
| 29.11.97 | 14 | | அமாவாசை விரதம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Fødselsdagshilsen
## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

சாம்பவி ராஜ்குமார்
SAMPAVI RAJKUMAR
09.07.96



பிறந்தநாள் வாழ்த்துக்கள் **Fødselsdagshilsen** பிறந்தநாள் வாழ்த்துக்கள் **Fødselsdagshilsen**



ஜதுர்ஷன் சிவபாலசிங்கம்
JATHURSHAN SIVABALASINGAM
28.08.96

பிறந்த தினத்தைக் கொண்டாடும்
இச் சிறார்களை கல்வியிற் சிறந்து விளங்கி நோய் நொடியின்றி சகல வளங்களும் பெற்று சிறப்புடன் நீடூழி வாழ்கவென **கற்பகம்** வாழ்த்துகின்றது

www.tamilarangam.net

Post besørget blad
7401 HRC 50147

**Tamilsk - Dansk Venskabsforening**

**தமிழ் – டெனிஸ் தோழமை ஒன்றியம்**

**Tamil Danish Friendship Association**

**Postboks 103, DK-7400 Herning, Denmark**

**Tlf & Fax +45 97 12 55 93, Giro 695- 0892**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்